உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்


மலர்-6 இதழ்-168

செப்டம்பர் 1-15 2023


விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்



e-magazine

# கிருஷ்ணார்ப்பணத்தின் மகிமையும் பெருமையும்

# கிருஷ்ணனரை வணங்கினால் சிறக்கும் தொழில்கள்



- மருத்துவ தொழிலை தொடங்குபவர்கள் கிருஷ்ணனை வழிபட்ட பிறகே தொடங்க வேண்டும் என அர்த்த சாஸ்திரத்தை எழுதிய சாணக்கியர் கூறியுள்ளார்.
- பெண்கள் கண்ணனை மனம் உருகி போற்றி வழிபட்டால் திருமண தடைகள் விலகி கல்யாணம் கைகூடும்.
- விவசாயிகள் கிருஷ்ணரை வழிபட்டால் வயல்களில் விளைச்சல் அதிகரித்து செல்வம் பெருகும்.
- தொழில் அதிபர்கள் கிருஷ்ணருக்கு சிறப்பான பூஜைகள் செய்தால், புகழ் கூடும். கூட்டுத் தொழில் செய்தால் வெற்றி பெறுவார்கள். தொழில் நிர்வாகத்தில் ஆற்றல் பெருகும்.

## பஞ்சாமிருத வழிபாட்டின் தாத்பரியம்




பஞ்சாமிருதத்தில் கடவுளிடம் செல்லும் மர்ம செய்தி ஒன்று உள்ளது. கங்கை நீரில் சர்க்கரை கலந்து பஞ்சாமிர்த்த பால், தயிர், தேன், நெய் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

1. **பால்:** கன்று அருகில் இருக்கும் வரை பசு பால் கொடுப்பதில்லை. கன்றுக்குட்டி இறந்து விட்டால். அதை வடிவமைக்காமல் பால் கொடுப்பதில்லை. பால் என்பது வேகத்தின் அறிகுறி.
2. **தேன்:** துகள்களை நிரப்ப தேன் சேகரிக்கிறது. இது பேராசை யின் அடையாளமாக கருதப்படுகிறது.
3. **தயிர்:** அதன் விளைவு சூடாக உள்ளது. கோபத்தின் அறி குறி
4. **நெய்:** அகங்காரத்தின் அடையாளம், செழிப்புடன் வர விருக்கிறது
5. **கங்கை நீர்:** மோட்சத்தின் அடை யாளம். கங்கையின் நீர். வேகம், பேரா சை, கோபம், கர்வம் இவற்றை அமை திப்படுத்துகிறது.



## பிரசாதம்

பிரசாதம் என்ற சொல்லுக்கு தூய்மை, மகிழ்ச்சி, பேரின்பம், அமைதி என அர்த்தங்கள் சொல லப்படுகின்றன. இறை சிந்தனை, மன தூய்மையுடன் பூஜை செய்யும் போது இறைவனின் திருமுகத்தை காணும் போது மனதில் ஏற்படும் அமைதியே உண்மையான பிரசாதம் என வேதங்கள் சொல்கின்றன.

# மகாலட்சுமியாக காட்சிதரும் பெருமாள்
# திருமண பிரச்சனை தீர்க்கும் அதிசயம்



பொதுவாக பெருமாளின் திருமார்பில் திருமகளும் தாயாரும் இருப்பதை நாம் பல தலங்களில் தரிசித்திருப்போம். ஆனால் பெருமாளே மகாலட்சுமி அவதாரத்தில் காட்சி தரும் கோவிலைப் பற்றி அறிந்திருக்கமாட்டோம்.

அந்த வகையில்,

சென்னை செங்கல்பட்டு மார்க்கத்தில் உள்ளது சிங்க பெருமாள்கோவில். இங்கிருந்து ஒரகடம் செல்லும் வழியில் சுமார் 8 கி.மீ. தொலைவில், ஆப்பூர் எனும் கிராமத்தின் வலப்புறம் அமைந்திருக்கிறது ஔஷதகிரி எனும் குன்று. கல்யாண வரம் அருளும் பெருமாளின் திருத்தலங்களில் இத்தலமும் ஒன்று.

இந்த ஸ்தலத்தின் சிறப்பு என்னவென்றால், இங்கு குடிகொண்டிருக்கும் பெருமாளுக்கு புடவை சாத்தி வழிபடுகிறார்கள் பக்தர்கள்!

மற்ற கோவில்களைப் போன்று பெருமாள் தனியாகவும் அம்பாள் தனியாகவும் வழிபடுவது கிடையாது. ஔஷதகிரி கோயிலில் அருளும் ஸ்ரீநித்ய கல்யாண பிரசன்னவேங்கடேச பெருமாளே திருமகளாகதரிசனம்தருவதாக ஐதீகம்.

அதன் காரணமாகவே இங்கே பெருமாளுக்கு ஆறு கஜ புடவை வஸ்திரமாகப் பக்தர்களால் சாத்தப்படுகிறது. கல்யாண வரம் வேண்டி வருபவர்கள் பெருமாளுக்குப் புடவை சாத்துவதாக வேண்டிக்கொள்கி றார்கள்.

உயர்ந்த மலையின் மீது இயற்கை எழில் நிறைந்த சூழ்நிலையில் கோயில் கொண்டிருக்கும் பெருமாளைத் தரிசிக்க 508 படிகள் ஏறிச் செல்ல வேண்டும். கோயில் சிறியதுதான்.

ஆலய முன்மண்டபத்தில் கருடாழ்வார் கூப்பிய கரங்களுடன் காட்சி தருகிறார். மண்டபத்தின் விதானத்தில் தசாவதாரக் காட்சிகளும், அஷ்டலட்சு மியர் வடிவங்களும் சுதைச் சிற்பமாக வடிக்கப் பட்டிருக் கின்றன.

கருவறையில் ஸ்ரீநித்ய கல்யாண பிரசன்ன வேங்கடேச பெருமாள் சங்கு சக்கரம் ஏந்தியும், அபயவரத ஹஸ்தம் காட் டியபடியும் நின்ற திருக்கோலத்தில் திருக்காட்சி தருகிறார். சித்தர்களும், அகத்திய மகரிஷியும் வழிபட்ட பெருமாளே இங்கு எல்லாமுமாக இருப்பதாக ஐதீகம். ஆகவே, பெருமாளையும் கருடாழ்வாரைத் தவிர வேறு தெய்வங்களோ, சந்நிதிகளோ இல்லை.

அனுமன் இலங்கைக்குச் சஞ்சீவி மலையைத் தூக்கிச் செல்லும் வழியில் விழுந்த சிறு குன்றே ஔஷதகிரியாக இங்கு காட்சி தருகிறது. அற்புத மூலிகைகள் நிறைந்த மலை என்று இதைக் குறிப்பிடுகிறார்கள்.

தஞ்சையில் உள்ள தங்க ஏட்டுச் சுவடியில் இந்த ஔஷதகிரியின் பெருமைகள் சொல்லப் பட்டுள்ளதாக அர்ச்சகர் தெரிவித்தார்.எப்போதும் வற்றாமல் திகழும் கிணற்று தீர்த்தமே பெருமாளின் திருமஞ்சனத்துக்குப் பயன்படுகிறது. பெருமாளே திருமகளின் அம்சமாகவும் அருளும் இந்தக் கோயிலுக்கு வந்து வழிபட்டால் வறுமை, கடன் தொல்லைகள் நீங்கும்; செல்வகடாட்சம் சித்திக்கும்.

மேலும், மூலிகைகள் நிறைந்த தலமாதலால் இங்குவரும் பக்தர்களுக்கு உடற்பிணிகள் நீங்குவதோடு, பெருமாளின் திருவருளால் மனப்பிணிகளும் நீங்கி மகத்தான வாழ்க்கை அமையும்.

www.aanmeegamalar.com



# கிருஷ்ணரும் பால் பாயசமும்

கேரளாவில், ஆலப்புழை அருகேயுள்ள அம்பலம்புழை கிருஷ்ணன்கோவிலில், கிழக்கு நோக்கி அருள்கிறார் கிருஷ்ணன். இவருக்கு பால் பாயசம், நைவேத்தியம் செய்தால் நினைத்தது நடக்கும் என்பது நம்பிக்கை. இங்கு ஒரு லிட்டர் பாலில் இரண்டரை கிலோ சீனி கலந்து பாலை சுண்டக் காய்ச்சி பால் பாயசம் தயாரிக்கின்றனர்.

❖ ● ❖

குரு பகவானும், வாயு பகவானும் சேர்ந்து பிரதிஷ்டை செய்த தலமான குருவாயூரில் உள்ள உன்னிக் கிருஷ்ணன் விக்கிரகம், பாதாள அஞ்சனம் என்னும் அபூர்வ மூலிகைப் பொருளால் ஆனது.

❖ ● ❖

வைணவத் திருத்தலங்கள் பலவற்றில், பெருமாள் சயனக் கோலத்தில் ஆதிசேஷனை தலையணையாகக் கொண்டு படுத்திருக்கும் காட்சியைப் பார்த்திருப்போம். அதே போல் துவாரகையில் உள்ள கிருஷ்ணன் கோவிலில், கிருஷ்ணர் சயனக் கோலத்தில் அருள் பாலிக்கிறார்.

ஆன்மிகமலர்

❖ ● ❖

கிருஷ்ண ஜெயந்தி அன்று பக்தர்கள் விரதம் இருந்து கண்ணனை வழிபடுவார்கள். அவ்வாறு செய்தால் தெரிந்தும், தெரியாமலும் செய்த பாவங்கள் விலகும் என்பது ஐதீகம்.

❖ ● ❖

திருநெல்வேலி மாவட்டம், அம்பா சமுத்திரம் வேணு கோபாலன் ஆலயத்தில் உள்ள வேணுகோபாலன் சிலை, நேபாளம் கண்டகி நதியில் கிடைக்கும் சாளக்ராமக் கல்லினால் ஆனது. கிருஷ்ண ஜெயந்தியன்று இங்கு பெருமாளுக்கு கண் திறப்பும், சங்கில் பால் புகட்டும் வைபவங்களும் நடக்கின்றன.

❖ ● ❖

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள செங்கத்தில் பத்மாவதி, ஆண்டாளுடன் கண்ணன் தரிசனம் தருகிறார். ஏழை பக்தனுக்கு புதையலைக் காட்டி அருளிய பெருமாள் இவர்.

❖ ● ❖

கடலூர் புதுப்பாளையத்தில் கண்ணன், ராஜ கோபாலனாக செங்கமலவள்ளி நாச்சியாருடன் அருளும் ஆலயம் இருக்கிறது. இந்த ஆலயத்தில் திருப்பதி கோவிலுக்கு செலுத்த வேண்டிய காணிக்கைகளை செலுத்தலாம் என்று கூறுகிறார்கள்.




கிருஷ்ண ஜெயந்தி ஸ்பெஷல்




# குழந்தை கிருஷ்ணரின் பாதத்தை வீட்டில் வரைவது ஏன்?

நாரத முனிவர் ஒரு சமயம் ஒவ்வொரு கிருஷ்ண பக்தர்களின் வீட்டுக்கும் சென்ற போது எல்லோரின் இல்லத்திலும்பகவான் கண்ணன் இருப்பதைக் கண்டு அதிசயித்தார்.



அதேபோல் பிருந்தா வனத்தில் ஒவ்வொரு வீட்டிலும் கிருஷ்ணர் ஆடிப் பாடினார். இந்தக் காட்சியை சிவபெருமானே தரிசித்து பரவசமும், ஆனந்தமும் அடைந்தார்.

இப்படி ஒரே நேரத்தில் பல்லாயிரம் இடங்களில் இருக்கிறார் நம் கிருஷ்ண பரமாத்மா.

நான் எங்கும் இருப்பேன். எத்தனை கோடி பக்தர்கள் இருந்தாலும், அத்தனை பக்தர்களையும் பார்ப்பேன், காப்பேன் என்பதைக் குறிப்பிடவே, ஒவ்வொருவர் வீட்டிலும் கிருஷ்ண ஜெயந்தியன்று கிருஷ்ண திருவடிக் கோலம் போடுகிறார்கள். கிருஷ்ணர் 8 வகையாக பக்தர்களுக்கு காட்சி தருகிறார்.

## 8 வகை கிருஷ்ணர்

- சந்தான கோபால கிருஷ்ணர்: யசோதையின் மடியிலே அமர்ந்த கோலம்.
- பால கிருஷ்ணன் : தவழும் கோலம்.
- காளிய கிருஷ்ணன் : காளிங்க மர்த்தனம் புரியும் கிருஷ்ணன்.
- கோவர்த்தனதாரி: கிருஷ்ணன் தன் சுண்டு விரலால் கோவர்த்தன கிரியைத் தூக்கும் கோலம்.
- ராதாகிருஷ்ணன் (வேணுகோபாலன்): வலது காலை சிறிது மடித்து இடது காலின் முன்பு வைத்து பக்கத்தில் ராதை நின்றிருக்க குழலூதும் கண்ணன்.
- முரளீதரன்: இதில் கிருஷ்ணன் நான்கு கைகளுடன், ருக்மணி மற்றும் சத்யபாமா சமேதனாய் நின்றிருக்கும் திருக்கோலம்.
- மதன கோபால்: அஷ்ட புஜங்களை உடைய குழலூதும் முரளீதரன்.
- பார்த்தசாரதி: அர்ஜுனனுக்கு கீதை உபதேசிக்கும் திருக்கோலம்.
- 8 வகைகளில் காட்சி தரும் கிருஷ்ணரின் பாதத்தை வீட்டில் வைத்து பூஜித்தால் குழந்தை பாக்கியம் கிட்டும். சந்தோஷத்திற்கு குறைவே இருக்காது.



www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# பசி தாகத்தை தீர்க்கும்

# கிருஷ்ண லீலை

கிருஷ்ண ஜெயந்தி ஸ்பெஷல்

- மகாவிஷ்ணு எடுத்த 9வது அவதாரம் கிருஷ்ணா அவதாரமாகும்.
- கிருஷ்ண ஜெயந்தி கொண்டாட்டங்களில் உறியடி விழா தான் பிரசித்தமாக நடை பெறும்.
- மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் வாழ்வில் இயல்பாக அமைந்த கடமைகளை முழுமையாகசெய்ய வேண்டும் என்பதை பகவத்கீதை மூலம் கிருஷ்ணர் உணர்த்தி யுள்ளார்.
- சென்னையில் கிருஷ்ண ஜெயந்தி கொண்டாட்டம் பல்வேறு இடங்களில் நடந்தாலும் ராயப்பேட்டையில் உள்ள கவுடியா மடத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.
- கிருஷ்ணர், தமிழ்நாட்டில் கண்ணன் என்றும், வட மாநிலங்களில் கண்ணையா என்றும் அழைக்கப்படுகிறார்.



- கிருஷ்ணருக்கு கேசவன், கோவிந்தன், கோபாலன் ஆகிய பெயர்களும் உண்டு.
- கிருஷ்ணர் இளம்வயதில் கோகுலத்தில் வாழ்ந்ததால், அவர் அவதரித்த கிருஷ்ண ஜெயந்தியை கோகுலாஷ்டமி என்றும் சொல்வார்கள்.
- கிருஷ்ண ஜெயந்தி தினத் தன்று கிருஷ் ணருக்கு மிகவும் பிடித்த சீடை, அவல் லட்டு, அப்பம், தட்டை, முள்ளு முறுக்கு, வெண்ணெய் பால் திரட்டு, நாட்டு சர்க் கரை போன்ற வைகளை படைத்து வழிபட வேண்டும்.
- கிருஷ்ண ஜெயந்தியன்று குழந்தையின் பாத சுவடுகளை தெருவில் இருந்து வீட்டுக்குள் வருவது போல வரைய வேண்டும். இதனால் கிருஷ்ணரே வீட் டுக்கு வருவதாக ஐதீகம்.
- கிருஷ்ண ஜெயந்தியை கேரளாவில் “அஷ்டமி ரோகிணி” என்றழைக்கிறார்கள்.
- கிருஷ்ணர் கோகுலத்தில் இளம் வயதில் கோபியர்களுடன் சேர்ந்து விளையாட் டுக்களில் ஈடுபட்டதை “ராசலீலா” என்ற பெயரில் நாடகமாக நடத்தப்படுவது வட மாநிலங்களில் பழக்கத்தில் உள்ளது.
- கிருஷ்ணர் நள்ளிரவில் பிறந்ததாக புராண வரலாறுகளில் சொல்லப்பட்டுள்ளது. எனவே கிருஷ்ண ஜெயந்தி அன்று இரவு வழிபாடு நடத்துவது உகந்தது.
- கிருஷ்ணர் 3 வயது வரை கோகுலத்திலும், 3 முதல் 6 வயது வரை பிருந்தாவனத்திலும் 7ம் வயதில் கோபியர்களுடனும் 8 முதல் 10 வயது வரை மதுராவிலும் வாழ்ந்தார்.
- கம்சனை வதம் செய்த போது, கிருஷ் ணருக்கு வயது 7.
- கிருஷ்ண பரமாத்மாவின் அருளை பெற

"கீதகோவிந்தம்", "ஸ்ரீமந் நாராயணீயம்", "கிருஷ்ண கர்ணாம்ருதம்" ஆகிய ஸ்தோத்ரங்களால் துதித்து வணங்க வேண்டும்.

❖ கிருஷ்ண ஜெயந்தியன்று சிறுவர் சிறுமிகளை கண்ணன், ராதைகள் வேடமிட்டு ஆராதிப்பது கூடுதல் பலன்களைத்தரும். இப்படி வேடமிடும் குழந்தைகள் புத்திசாலிகளாகத்திகழ்வார்கள் என்பது நம்பிக்கை.

❖ கண்ணனை வழிபட்டால் அகந்தை அகலும். குழந்தைகளுக்கு மூர்க்க குணம் ஏற்படாது. இளைஞர்கள் தர்ம சிலராக வாழ்வார்கள். அரசியல்வாதிகளுக்கு நிர்வாகத் திறமை அதிகரிக்கும்.

❖ கிருஷ்ண லீலையை மனம் ஒன்றி கேட்டால் பசி, தாகம் ஏற்படாது.

❖ கிருஷ்ண நாமத்தை தினமும் உச்சரிப்பவர்களும், கேட்பவர்களும் புண்ணிய உலகை சென்றடைவது உறுதி.

❖ பாகவதத்தில் உள்ள அவதார கட்டத்தை பாராயணம் செய்வது மிகுந்த புண்ணியத்தைத் தரும். அந்த பாராயணத்தை கேட்டாலும் புண்ணியம் கிடைக்கும்.

❖ கிருஷ்ண ஜெயந்தியன்று கிருஷ்ணரின் அருள் 100 சதவீதம் அதிகரிப்பதாகபக்தர்கள் நம்புகிறார்கள்.

ஓம் நமோ பகவதே வாசுதேவாய என்று ஜெபித்தால் கிருஷ்ணர் அருட்பார்வை நம்மீது படும்.

❖ ராஜஸ்தான் மாநிலம் நாத்வாரா தலத்தில் அருள்புரியும் கிருஷ்ணரான ஸ்ரீநாத் ஜீக்கு என்னென்ன நைவேத்தியம்சமர்ப்பிக்க வேண்டும் என்பதை ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பே எழுதி வைத்துள்ளனர். பாதாம் பருப்பு, பிஸ்தா பருப்பு, லட்டு, இனிப்பு பூரிகள், மோர்க்குழம்பு ஆகியவை இவருக்கு மிகவும் பிடித்த உணவு வகைகள்.

❖ துவாரகையில் கோவில் கொண்டிருக்கும் கண்ணனுக்கு துவாரகீசன் என்று பெயர். ஜகத் மந்திர் என்று அழைக்கப்படும் இந்த ஆலயத்தில் பிரதான வாசலின் பெயர் ச்வர்க்க துவாரம். இது எந்த நேரமும் திறந்தே இருக்கும். இதைத்தாண்டி சென்றால் மோட்ச துவாரம் வரும். அதையும் தாண்டி சென்றால்தான் கண்ணன் தரிசனம் கிடைக்கும்.

❖ கண்ணனின் லீலைகளை விளக்கும் `கர்பா' என்ற நாட்டியம் குஜராத்தில் பிரபலம். இது தமிழ் நாட்டு கும்மி, கோலாட்டம் போல் நடத்தப்படுகிறது. நீராடும் கோபியர்களின் ஆடைகளை யாருக்கும் தெரியாமல் எடுத்து செல்லுதல், வெண்ணெய் திருடி உண்ணுதல் போன்ற கண்ணன் புரிந்த லீலைகள், அந்த நாட்டியத்தின் மூலம் அழகாக எடுத்துரைக்கப்படுகின்றன.

❖ உடுப்பி கிருஷ்ணர் கோவிலில் பூஜைக்குரிய பொருட்கள் வாங்கும் போது மரத்தாலான மத்து ஒன்றையும் வாங்கும் பழக்கம் பக்தர்களுக்கு உண்டு.உடுப்பியை அன்னப்பிரம்மா என்றும், பண்டரி புரத்தை நாத பிரம்மா என்றும் போற்றுகின்றனர்.

❖ கேரளாவில், ஆலப்புழை அருகேயுள்ள அம்பலப்புழை ஸ்ரீகிருஷ்ணன் கோயிலில் கிழக்கு நோக்கி அருள்கிறார் கிருஷ்ணன். இவருக்கு பால், பாயாசம், நைவேத்தியம்



செய்தால் நினைத்தது நடக்கும் என்பது நம்பிக்கை. இங்கு ஒரு லிட்டர் பாலில் இரண்டரை கிலோ சீனி கலந்து பாலை சுண்டக்காய்ச்சி பால் பாயாசம் தயாரிக் கின்றனர்.

- குருவும், வாயுவும் சேர்ந்து பிரதிஷ்டை செய்த தலமான குருவாயூரில் உள்ள உன்னிக் கிருஷ்ணன் விக்கிரகம் பாதாள அஞ்சனம் என்னும் அபூர்வ மூலிகைப் பொருளால் ஆனது.
- வைணவத் திருத்தலங்களில் பெருமாள் சயன கோலத்தில் சேவை சாதிப்பது போல் முக்தி தரும் திருத்தலமாக துவாரகையில் அமைந்துள்ளது கிருஷ்ணன் கோவில். பகவான் கிருஷ்ணர் இங்கு சயனக் கோலத்தில் அருள்புரிகிறார்.
- கிருஷ்ண ஜெயந்தி அன்று பக்தர்கள் விரதம் இருந்து கண்ணனை வழிபடு வார்கள். அவ்வாறு செய்தால் தெரிந்தும், தெரியாமலும் செய்த பாவங்கள் விலகும் என்பது ஐதீகம்.
- மதுராவில் தேவகி வசுதேவருக்கு எட்டாவது மகனாக அவதரித்தார் கிருஷ்ணர். அவர் பிறந்த இடம் ஒரு சிறிய சிறைச்சாலை. தற்போது, அந்த இடத்திற்கு மேல் 'கத்ர கேஷப்தேவ்' என்ற கிருஷ்ணர் கோவில் எழுப்பப்பட்டுள்ளது.
- கிருஷ்ண வழிபாடு நம் நாட்டில் தொன்று தொட்டு இருந்து வருகிறது. கிருஷ் ணனைப் பற்றிய மிகப் பழமை வாய்ந்த ஆதாரம் ரிக்வேதத்தில் உள்ளது. இந்திரனு டன் கிருஷ்ணர் போரிட்டதாக அச்செய்தி தெரிவிக்கிறது.
- சாந்தோக்ய உபநிஷத்தில் கிருஷ் ணன் தேவகியின் மகன் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.
- அர்த்த சாஸ்திரத்தை எழுதிய சாணக்கியர், மருத்துவ தொழிலை தொடங்குபவர்கள் கிருஷ்ணனை வழிபட்ட பிறகே தொடங்க வேண்டும் என கூறியுள்ளார்.
- அலெக்சாண்டருடன் போரிட்டு வென்ற போரஸ் (புருஷோத்தமர்) தனது படைகளுக்கு முன்னாள் கிருஷ்ணனின் உருவத்தை நிறுத்தியிருந்தார். போரில் வெற்றி பெற கிருஷ்ணனே காரணம் என கருதினார்.
- யமுனை ஆற்றங்கரையில் கிருஷ்ண வழி பாடு இருந்ததாக மெகஸ்தானிஸ் தனது வரலாற்று குறிப்புகளில் எழுதியுள்ளார்.
- சிலப்பதிகாரத்தில் கிருஷ்ணனின் அண் ணன் பலராமன் என்றும், மனைவி நப் பின்னை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. நப்பின்னை யாதவர் குலத்தைச் சேர்ந்தவள் என்றும், ராதையை கிருஷ்ணனின் காதலி என்றும், ராதை மற்றும் ருக்மணியை விட நப்பின்னை மேன்மையானவள் என்றும் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. நப்பின்னையை ஆழ்வார்களும் பாராட்டி யுள் ளனர்.
- ஒரு சமயம்







அசுரர்கள் சூரியனை தடுத்து மறைத்து விட்டால் பூமி இருளடைந்து தவித்தது. அப்போது கிருஷ்ண பரமாத்மா சூரியனை ஆகாயத்தில் நிலைக்கச் செய்ததாக புறநானூறு குறிப்பிடுகிறது.

❖ நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரம் வேணுகோபாலன் ஆலயத்தில் உள்ள வேணுகோபாலன் சிலை நேபாளம் கண்டகி நதியில் கிடைக்கும் சாளக்ராமக் கல்லினால் ஆனது. கிருஷ்ண ஜெயந்தி யன்று இங்கு பெருமாளுக்கு கண்திறப்பு, சங்கில் பால் புகட்டும் வைபவங்களும் நடக்கின்றன.

❖ செங்கத்தில் பத்மாவதி ஆண்டாளுடன் கண்ணன் தரிசனம் தருகிறார். பரம பக்தனான ஏழைக்கு புதையலைக் காட்டிய பெருமாள் இவர்.

❖ கண்ணன், ராஜகோபாலனாக செங்க மலவல்லி நாச்சியாருடன் அருளும் கோயில் கடலூர், புதுப்பாளை யத்தில் உள்ளது. திருப்பதி பெருமாளுக்கான காணிக்கை களை இங்கு சேர்க்கலாம்.

❖ மூலவர் கோபிநாதராகவும், உற்சவர் கிருஷ்ணராகவும், திண்டுக்கல், ரெட்டியார் சத் திரத்தில் அருள்கிறார்கள். இந்த கண்ணன் கால்நடை களை காப்பதாக ஐதிகம்.

❖ கண்ணன் பாமாருக்மிணியு டன் அருளும் ஆலயம் மதுரை குரார் கள்ளிக்குடியில் உள்ளது. இங்குள்ள நந்தவனத்திலுள்ள புளியமரம் பூப்பதும், காய்ப்பதும் இல்லை. குழந்தைகள் கல்வியில் சிறக்க, இங்கே மாவிளக்கேற்றி வழிபடுகிறார்கள்.

❖ காஞ்சிபுரம், மணிமங்கலத்தில் ராஜ கோபாலசுவாமி, செங்கமலவல்லித்தாயா ருடன் கோயில் கொண்டுள்ளார். பெரு மாள் இடது கையில் சக்கரமும் வலது கையில் சங்கும் ஏந்தியிருப்பது அதிசயம்.

❖ சென்னை ஆதம்பாக்கம், சாந்தி நகரில் பாண்டு ரங்கன் ஆலயம் உள்ளது. பண்டரி புரத்தில் உள்ளது போலவே கோபுர அமைப்புடன் இந்த ஆலயம் உள்ளது.

❖ தென்னாங்கூர், பாண்டுரங்கன் ஆலயத் தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தோற்றத்தில் பாண்டுரங்கனையும் ருக் மணியையும் அலங்கரிக்கின்றனர்.

❖ மதுரை அருப்புக்கோட்டை பாதை யில் கம்பிக்குடியில் கோயில் கொண்டிருக்கும் வேணுகோபால சுவாமி, நோயினால்துன்பு றும் குழந்தைகளை தெய்வீக மருத்துவ னாகக் காப்பதாக பக்தர்கள் நம்பு கிறார்கள்.



அழகுராஜா

கிருஷ்ண ஜெயந்தி ஸ்பெஷல் தொகுப்பு
– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994323622

ஆன்மிகத் தகவல்களை

எளிமையாக, பாமரர்களும் புரிந்து
கொள்ளும் வகையில்

**ஆன்மிகமலர்** மெயில்
புத்தகத்தில் (e-book)
வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD
free

இதுவரை வெளிவந்த

**170** க்கும் மேற்பட்ட
இதழ்களை




**aanmeegamalar.com**

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்.

# காசியில் தரிசிக்க வேண்டிய தீர்த்த கட்டங்கள்

காசி காண்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, காசியில் தற்போதும் அன்பர்கள் தரிசிக்கக்கூடிய தீர்த்த கட்டங்கள்

### பாதோதக தீர்த்தம்

சிவபெருமான் அறுபத்து நான்கு யோகினிகளை காசியில் குழப்பத்தை ஏற்படுத்தஅனுப்பினார், அவர்கள் திரும்பி வராததால், அவர் சூரியனையும், பின்னர் பிரம்மாவையும் விநாயகரையும் அனுப்பினார். இந்த தெய்வங்கள் திரும்பி வராததால், சிவபெருமான் அதே பணியை நிறைவேற்ற பகவான் விஷ்ணுவை காசிக்கு அனுப்பினார்.

சிவபெருமானிடமிருந்து இத்தகைய தெய்வீக அறிவுறுத்தல்களைப் பெற்றதில் விஷ்ணு மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

சிவபெருமானை வேண்டிக் கொண்டுமகாலட்சுமி தேவியுடன் கருட வாகனத்தில் பயணித்து காசியை அடைந்தார். காசிக்குச் செல்வதற்கு, சரியான முகூர்த்தத்திற்காக காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் இந்த புனிதமான பணிக்கு எப்போது வேண்டுமானாலும் நல்ல நேரம்.

காசியை அடைந்ததும் மகாவிஷ்ணு காசிக்கு வந்து க்ஷேத்திரம் முழுவதையும் அகன்ற கண்களுடன் பார்த்தார்.

பின்னர் அவர் புனித நதியான வருணா கங்கை நதியுடன் சேரும் இடத்திற்குச் சென்று கை, கால்களைக் கழுவினார்.

விஷ்ணுவின் சரண (மரியாதையுடன் குறிப்பிடப்படும் பாதங்கள்) கழுவப்பட்ட இடம் பாதோதக தீர்த்தம் என்று அழைக்கப்பட்டது. ஸ்கந்த புராணம், காசி காண்டம், அத்தியாயம் 58 இன் படி, பாதோதக தீர்த்தத்தில் நீராடும் பக்தர்களின் தற்போதைய வாழ்க்கை உட்பட 7 பிறவிகளில் திரட்டப்பட்ட அனைத்து பாவங்களும் நீங்கும்.

இங்கு சிரார்த்தம் செய்யும் ஒரு பக்தர், தனது முன்னோர்களின் இருபத்தி ஒரு தலைமுறைக்கு சேவை செய்கிறார் காசியில் உள்ள பாதோதக தீர்த்தத்தில் சிரார்த்தம் செய்வது கயாவில் சிரார்த்தம் செய்வதற்குச் சமம்.






**காசியைப் பற்றி முழுமையான தகவல்களை பல்வேறு மொழிகளில் எழுதி, அனைவரும் காசியைப் பற்றி அறிந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை செய்யும் எழுத்தாளர் பி.எஸ்.வெங்கடரமணன் காசியைப் பற்றி முழுத் தகவல்களையும் நமது இதழில் தொடராக எழுதுகிறார். இவர் காசியைப் பற்றி எழுதிய புத்தகத்தை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.**



பாதோதக தீர்த்தத்தில் புனித நீராடி, பாதோதக நீரைப் பருகி, மற்றவருக்குப் பாதோதக நீரைக் கொடுக்கும் ஒரு பக்தன் மகாவிஷ்ணுவால் ஆசிர் வதிக்கப்படுவான், அவன் நரகத்தைச் சந்திக்க மாட்டான். சரண் அமிர்தம் (விஷ்ணுவின் தாமரை பாதங்களில் இருந்து வரும் அமிர்தம்) என்ற பாதோதக தீர்த்தத்தின் நீரை உட்கொள்ளும் ஒருவருக்கு இந்த உலகில் மறுபிறப்பு பற்றிய பயம் தேவையில்லை.

பக்தர்கள் சங்கில் பாதோதக தீர்த்தம் எடுத்து இறைவனுக்கு அபிஷேகம் செய்து அத்தகைய நீரைப் பருகுமாறு காசி காண்டம் அறிவுறுத்துகிறது. அத்தகைய பக்தர்களுக்கு அபபிர்த்ய அகால மரணம்) பற்றிய பயம் இருக்காது மேலும், அவர்களின் நல்ல செயல்களுக்காக அவர்கள் எப்போதும் நினைவுகூரப்படுவார்கள்.

பாதோதக தீர்த்தம் எந்த ஆறு அல்லது குளத்தின் வடிவத்திலும் தற்சமயம் இல்லை இருப்பினும், திரிலோச்சனேஸ்வரர் கோவில் வளாகத்திற்குள் ஒரு பாதோதக் கூப் (கிணறு) உள்ளது ஒரு கட்டத்தில் கிணறு அமைக்கப்பட்டு அங்கு ஒரு கை பம்ப் பொருத்தப்பட்டுள்ளது. தணணீர் மிகவும் தூய்மையாகவும் சுத்தமாகவும் இருக்கிறது.

இங்கு ஒரு விஷயத்தை குறிப்பிட வேண்டும். காசி காண்டத்தில் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகள் பல: யுகங்களுக்கு முந்தையவை அனேகமாக அக்காலத்தில் வருணா நதி மிகவும் அகலமாக இருந்திருக்கலாம் மேலும் ஒரு பரந்த நிலப் பரப்பை உள்ளடக்கியிருக்க வேண்டும் தற்போது, இந்த நதி மிகவும் குறுகலாக உள்ளது மற்றும் திரிலோச்சனேஷ்வரிலிருந்து வெகு தொலைவில் உள்ளது. தற்போது ஓடைபோல் காட்சி யளிக்கிறது.

த்ரிலோச்சனேஷ்வரரை தரிசிக்கும் பக்தர்கள் பாதோதக கிணற்றிலிருந்து வரும் தண்ணீருக்கு தெய்வீக மரியாதையுடன் பருகுகிறார்கள். புருஷோத்தம மாசம் மற்றும் அக்ஷய திரிதியா நாளில், மக்கள் அதிக எண்ணிக்கையில் இந்த கோவிலுக்கு வருகை தந்து, பாதோதக கிணற் றில் இருந்து சரண் அமிர்தமாக தண்ணீரை உட் கொள்கின்றனர்.

– காசி பயணம் தொடரும்

பி.எஸ்.வெங்கடரமணன்
தொலைபேசி எண்: 9839061178





# மஞ்சளில் பிடித்து வைத்த பிள்ளையாரின் மகத்துவம்

1. மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வழி பட சகல சௌபாக்கியமும் கிடைக்கும். காரிய சித்தி தருவார்.
2. குங்குமத்தால் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்க செவ்வாய் தோஷம் அகலும். குழந்தைகளைப் படிப்பில் வல்லவராக்குவார்.
3. புற்று மண்ணினால் பிள்ளையார் செய்து வணங்க நோய்கள் அகலும். விவசாயம் செழிக்கும்.
4. வெல்லத்தில் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்கினால் உடலில் உள்ளேயும், வெளி யேயும்உள்ள கட்டிகள் (கொப்பளம்)கரையும்.
5. உப்பினால் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்கினால் எதிரிகளின்தொல்லை நீங்கும். எதிரிகளை விரட்டுவார்.
6. வெள்ளெருக்கில் பிள்ளையார் செய்து வணங்கினால் பில்லி, சூனியம் விலகும். செல்வம் உயரச் செய்வார்.
7. விபூதியால் விநாயகர் பிடித்து வழிப்பட்டால் உஷ்ண நோய்கள் நீங்கும்.
8. சந்தனத்தால் பிள்ளையார் செய்து வழிபட்டால் புத்திர பேறு கிடைக்கும்.
9. சாணத்தால் பிள்ளையார் செய்துவழிபட்டால் சகல தோஷமும் விலகி, வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெற வழி வகுக்கும்.
10. வாழைப் பழத்தில் பிள்ளையார் செய்து வழிபட்டால் வம்ச விருத்தி உண்டாகும்.
11. வெண்ணெயில் பிள்ளையார் செய்து வழிபட்டால் கடன் தொல்லை நீங்கும்.
12. சர்க்கரையில் பிள்ளையார் செய்து வழிபட சர்க்கரை நோயின் வீரியம் குறையும்.
13. பசுஞ்சாண விநாயகர் நோய்களை நீக்குவார்.
14. கல் விநாயகர் வெற்றி தருவார்.
15. புற்றுமண் விநாயகர் வியாபாரத்தை பெருக வைப்பார்.
16. மண் விநாயகர் உயர் பதவிகள் கொடுப்பார்.

ஆன்மிகமலர் .காம்

# அப்பைய தீட்சிதரும் கர்மவினையின் விளக்கமும்

அப்பைய தீட்சிதர் (1520 – 1593) தமிழ்நாட்டில் சிறந்த அத்வைத வேதாந்த பண்டிதராக வாழ்ந்து பல சாதனைகள் புரிந்தவர். பாமர மக்களுக்கெல்லாம் சிவ தத்துவத்தையும் அத்வைதத்தையும் புரிய வைப்பதற்காக தொண்டர்களைத் திரட்டி ஒரு இயக்கமே நடத்தியவர். பயணங்கள் பல செய்து வேதாந்தத்திலும் இலக்கியத்திலும் வாதவிவாதங்களில் தன் புலமையை நிலை நாட்டியிருக்கிறார். அவருடைய புகழ் வடநாட்டிலும் காசி வரையில் பரவி யிருக்கிறது. இந்து சமயத்தின் தூண்களான கருமம், பக்தி, ஞானம் இவை மூன்றிற்கும் ஒரு இணையற்ற முன்மாதிரியாகவே இருந்து மறைந்தவர்.

தீட்சிதருடைய கடைக்காலத்தில் அவருக்கு ஒருவித வயிற்று வலி (சூளை நோய்) அவரை மிகவும் வாட்டி வதைத்தது. அவர் சிறந்த யோக சக்திகள் உடையவராதலால், தியானம் செய்யவோ அல்லது யாராவது முக்கியப்பட்டவருடன் பேசவேண்டியிருந்தாலோ, ஒரு தர்ப்பை புல்லை அருகே போட்டு அந்த புல்லின் மேல் அந்த வலியை தன் தவ சக்தியால் இறக்கி வைத்துவிட்டு, தன் வேலையில் ஈடுபடுவாராம். அந்தப் புல் அது பாட்டுக்கு இப்படி அப்படி என்று துள்ளிக்கொண்டே இருக்குமாம். பிறகு வேலை முடிந்தவுடன் புல்லிடமிருந்து அந்த வலியை திரும்ப தனக்குள் வாங்கிக் கொள்வாராம்.

ஒரு பண்டிதருடன் இவ்வாறு ஒருமுறை வாதத்தில் ஈடுபட நேர்ந்தபோது, வழக்கம் போல, தமது வலியை தற்காலிகமாக தர்ப்பை புல்லின் மேல் இறக்கி வைத்துவிட்டு வாதம் புரியலானார். புல்லும் அதுபாட்டுக்கு துள்ள ஆரம்பித்தது.



ஒரு கட்டத்தில் வாதம் மிகவும் தீவிரமடைய, உட்கார்ந்திருந்த இருவரும் நின்றுகொண்டு வாதம் புரியலாயினர். புள்

துள்ளுவது அதிகரித்து சற்று உயரமாகவே துள்ள ஆரம்பித்தது.

இதை ஆச்சரியத்துடன் பார்த்த அந்த பண்டிதர் தீட்சிதரிடம், "இவ்வளவு தவ வலிமை கொண்ட நீங்கள் ஏன் நிரந்தரமாக அந்த வலியை போக்கிகொள்ளக்கூடாது? எதற்கு புல்லின் மீது இறக்கி வைத்துவிட்டு திரும்பவும் ஏற்றுக்கொள்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

"இந்த வயிற்று வலி என் கர்ம வினையால் எனக்கு வந்தது. நமது முந்தைய செயல்களினால் ஏற்படும் கர்ம வினையை எப்படியும் அனுபவித்துத்தான் ஆகவேண்டும். அதிலிருந்து தப்பிக்க எண்ணக் கூடாது. முற்பிறப்பில் நான் செய்த சிறு பாவத்தின் பலன் தான் இந்த சூளை நோய். இப்போது நான் இதை அனுபவிக்கவில்லை எனில், இதை அனுபவிப்பதற்காக இன்னொரு பிறவி எடுக்க நேரிடும். அதற்காகத் தான் புல்லின் மீது இறக்கி வைத்துவிட்டு திரும்பவும் ஏற்றுக்கொள்கிறேன்!'' என்றாராம்.

இதிலிருந்து மிகப் பெரிய தவசீலர்களே கூட கர்மாவிலிருந்து தப்பிக்க நினைக்காமல் அதை அனுபவித்து தீர்க்கவே முனைந்திருக்கிறார்கள் என்பது புலனாகிறதல்லவா?

தவசீலர்களை விடுங்கள். படைத்தவனே கூட அவன் செய்த வினையிலிருந்து தப்ப முடியாது எனும்போது நாமெல்லாம் எம்மாத்திரம்?

தவசீலர்களை விடுங்கள்ஞ். படைத்தவனே கூட அவன் செய்த வினையிலிருந்து தப்ப முடியாது எனும்போது நாமெல்லாம் எம்மாத்திரம்?

குருக்ஷேத்திரத்தில் அர்ச்சுனனுக்கு யாதவ குலத் தலைவனான கிருஷ்ணன் போர்க்களத்திலேயே கீதையைப் போதித்தார். பின் 18 நாட்கள் நடந்த பாரதப் போர் பாண்டவர்களின் வெற்றியுடன் முடிவடைந்தது. பின்னர், தருமருக்குப் பட்டாபிஷேகம் செய்துவிட்டு துவாரகை சென்ற கண்ணன் அரசாண்டார்.

மிதமிஞ்சிய கர்வத்தில் திளைத்த யாதவர்கள் துவாரகையில் வரம்பு கடந்த சுகபோகத்தில் ஈடுபட்டனர். ஒரு நாள் சாம்பன் என்பவனுக்கு கர்ப்பிணிப் பெண் போல வேடமிட்டு, அங்கு வந்த ஒரு ரிஷியிடம், "என்ன குழந்தை பிறக்கும்?' எனக் கேட்டனர். உண்மையை உணர்ந்த ரிஷி கடுங்கோபத்துடன், "இரும்பு உலக்கைதான் பிறக்கும்; அதனால் உங்கள் குலமே அழியும்' என சாபமிட்டார். அதன்படியே மதுவனத்தில் மது உண்ட மயக்கத்தில் யாதவர்கள் ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ள



பிரபாசபட்டினக் கடற்கரையில் யாதவர் குலம் முற்றும் அழிந்தே போனது.

(தனது இனம் தன்னைத் தானே அடித்துக் கொண்டு அழிவதை எந்த மன்னன் கண்டு மௌனமாக இருப்பான்? மதுவினால் அது நடந்துவிடக்கூடாது என்று எண்ணி யாதவர்களின் அரசன் உக்ரசேனன் ஒரு கட்டத்தில் துவாரகையில் மது உற்பத்தியையும் மது அருந்துவதையும் கூட தடை செய்தான். கிருஷ்ணர் அனைத்து யாதவர்களையும் சமுத்திரத்தில் குளிக்கச் செய்து பாவத்தை போக்க முற்பட்டார். ஆனால் விதி வலியதன்றோ? பிரபாசப் பட்டினக் கடற்கரையில் மதுவருந்தி தங்கள் முடிவை தேடிக்கொண்டார்கள் யாதவர்கள்!)

இது கண்டு கவலையுற்ற பலராமர் யோகத்தில் அமர்ந்து உயிர் துறந்து பலராம அவதாரத்தை முடித்துக் கொண்டார். நடந்த அனைத்தையும் பார்த்த கிருஷ்ணர், தன்னைத் தவிர யாவரும் அழிந்தனர்; தானும் தன் அவதாரத்தை முடிக்கும் காலம் வந்துவிட்டது என எண்ணி, குரா மரத்தடியில் சரிந்து அமர்ந்தார்.





அங்கு வந்த ஜரா எனும் வேடன் எய்த அம்பு குறி தவறி கண்ணனின் காலில் தைத்தது; கண்ணனின் உயிர் பிரிந்தது. அவர் சரீர தியாகம் செய்து கொண்ட இடம்தான் இப்போது தோரஹரசாகர் என அழைக்கப்படுகிறது. இது ஹிரண்ய நதிக்கரையில் உள்ளது. இந்நதிக்கரை யில் அர்ச்சுனன் கண்ணன் மகனின் உதவியுடன் சந்தனக் கட்டைகளை அடுக்கி, கண்ணனுக்கு ஈமக்கிரியைகளைச் செய்து முடித்தான்.

அப்போது கண்ணனின் தேகம் ஒரு மரக் கட்டையாகி நீரில் மிதந்து பூரி கடற்கரையருகில் ஒதுங்கியது. அதை எடுத்து ஒரு சிலை செய்து பூரி ஜகந்நாதர் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்தனர்.

“முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்’ என்பது கடவுள் அவதாரத்துக்கும் பொருந்தும் என்பதை இதனால் நாம் அறிந்து கொள்ளலாம். கிருஷ்ணாவதாரம் துவாபர யுக முடிவில் நிறை வுற்றது. அதன்பின் தோன்றிய யுகம்தான் நாம் வாழும் இந்த கலியுகம். கிருஷ்ணர் இந்த பூமியிலிருந்து சென்றவுடன், கலி புருஷன் அவ தரித்துவிட்டான்.

இதிலிருந்து என்ன தெரிகிறது. நீங்கள் மமதையால் செய்யும் சிறு பாவம் கூட உங்கள் சந்ததியையே வாட்டும் ஆபத்து இருக்கிறது என்பது தானே? என்றார்.

மொத்தத்தில் கர்மவினை என்பது கடவுளுக் கும் பொருந்தும். அதிலிருந்து எவருமே தப்ப முடியாது! ஆகவே தான் வள்ளுவர் கூட திருக்குறளில் ‘ஊழ்’ என்று ஒரு தனி அதி காரமே படைத்திருக்கிறார்.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். (குறள் 380)

பொருள்: விதியை வெல்ல வேறொரு வழியை எண்ணி நாம் செயற்பட்டாலும், அந்த வழியிலேயோ வேறு ஒரு வழியிலேயோ அது நம்முன் வந்து நிற்கும்; ஆகவே விதியை விட வேறு எவை வலிமையானவை?.

www.aanmeegamalar.com

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# விருப்ப சந்தா செலுத்த










விருப்ப
**சந்தா**

**UPI மற்றும் வங்கி**
**வாயிலாகவும்**
**சந்தா செலுத்துங்கள்...**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**

# நொய்டா கோயில்களில் நடைபெறும் யஜூர் உபகர்மா‘






பக்தர்களின் வசதிக்காக வேதப் பிரச்சார் சன்ஸ்தான் **(VPS)** நிர்வாகத்தின் ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவில், ஸ்ரீ வரசித்தி விநாயக கோவில், ஆகிய இரு கோவில்களிலும் 'யஜுர் உபாகர்மா' ஏற்பாடு செய்திருந்தது.

இங்கு 100 க்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்று, முழு ஹோமம் மற்றும் பூஜைகளை ஸ்ரீராம் சாஸ்திரிகள் தலைமையில் ஸ்ரீ மணிகண்டன் சர்மா மற்றும் ஸ்ரீ மோஹித் மிஸ்ரா ஆகியோரின் உதவியுடன் செய்தார்கள்,

‘ஆவணி அவிட்டம்’ என்பதன் முக்கியத் துவத்தையும், பூணூல் ஏன் மாற்றப் படுகிறது என்பதையும், ஸ்ரீராம் வாத்தியார் அனைத்து பக்தர்களுக்கும் எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்வின் போது முதல் தலைமுறை இளைஞர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

அவர்களுக்கு இது ‘தலை ஆவணி அவிட்டம்’ ஆகும். VPS நிர்வாகத்தின் முயற்சிகளை அவர் பாராட்டினார், இதன் காரணமாக நொய்டா, கிரேட்டர் நொய்டா மற்றும் அண்டை பகுதிகளின் பல்வேறு துறைகளில் இருந்து 100 க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர்.

பக்தர்கள் தங்கள் வீடுகளில் தயாரிக்கப்பட்ட 'பிரசாதத்தை' கொண்டு வந்து, அங்கிருந்த அனைவருக்கும் விநியோகம் செய்தனர்.

ஆவணி அவிட்டத்தின் போது வட இந்தியா பகுதிகளில் விடுமுறை இல்லாத போதும், பெரும்பாலான பக்தர்கள் கலந்து கொண்டு, அனைவரும் கோயிலுக்கு வந்திருந்து பொறுமை யாக பூணூல் மாற்றிக் கொண்டனர்.

கலந்து கொண்ட பக்தர் களுக்கு வேதப் பிரச்சாரகர் நிர் வாகம் நன்றி தெரிவித்தது. மேலும், உறுப்பினர்களான ராஜு ஐயர், ராமசேஷன் மற்றும் அர்ஜுன் ஆகி யோரைப் பாராட்டினர்.



எஸ்.வெங்கடேசன்

**– எஸ்.வெங்கடேசன், நொய்டா**
**தொடர்பு எண்: 9811161370**



மாதம் தோறும் 2 புத்தகங்கள்
www.aanmeegamalar.com
e- magazine
ஆன்மிகமலர்
மெயில் புக்
உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்
ஆன்மிகமலர் mobile app
சிவ அதிர்வை தரும் வில்வ இலை பூஜை
சனிதோஷம், தீயசக்திகளை விரட்டும் மூத்ததேவி வழிபாடு
மழை வேண்டி இறைவனிடம் கூட்டு பிரார்த்தனை செய்யுங்கள்
முதல்வர் அறிவிப்பு: சென்னையில் கொட்டிய மழை
e-magazine வரலாற்றில் முதன்முறையாக
படியுங்கள் இலவசமாக
aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்



# குறைகள் தீர்க்கும் குன்றத்தூர் முருகன்



குன்றத்தூர் முருகன் கோயிலில் தேவியர் இருவருடன் குன்றிலமர்ந்த பெருமான் குயில்கூவ மயிலாடும், மகிழ்ந்து காட்சி அளிக்கிறார்.

இத்திருத்தலம் சென்னைக்கு தென்மேற்கே 20 கிலோ மீட்டர் தொலைவிலும், பல்லாவரத்திற்கு மேற்கே, போரூர்க்கு தெற்கே, பூவிருந்தவல்லிக்கு தென் கிழக்கே 7 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. திருத்தணிகை செல்லும் வழியில் ஒரு முகூர்த்த காலம் இம்மலையில் முருகப்பெருமான் தங்கியிருந்ததாக புராண வரலாறு கூறுகிறது.

பெரிய புராணம் அருளிச்செய்த தெய்வச் சேக்கிழார் பெருமான் அவதரித்த திருத்தலம் ஆகும். குன்று ஒன்று இவ்வூரில் உள்ளதால் குன்றத்தூர் என்று பெயர் பெற்றது. இக்குன்றின்மீது முருகப்பெருமான் வடதிசை நோக்கி அமர்ந்து வள்ளி தெய்வானையுடன் காட்சி அளித்து பக்தர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றி அருள்பாலிப்பது தனிச்சிறப்பு.

கருவறைக்குள் வள்ளி தெய்வானையுடன் கூடிய சுப்பிரமணியரின் சுந்தரக்கோலம் காணலாம். மூவராக இருந்தாலும் ஒரு சேர அவர்களை தரிசிக்க இயலாது. இங்கு ஒரு பக்கத்தில் நின்று பார்த்தால் வள்ளி முருகனும், மறுபக்கத்தில் நின்று பார்த்தால் தெய்வானை முருகனும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற தத்துவத்தில் காட்சி அளிக்கும் அதிசயத்தை இங்கு காணலாம்.

இத்திருக்கோயிலில் ஒரே ஒரு கல்வெட்டு மட்டுமே உள்ளது. அதன் மூலம் (கி.பி. 1726) இக்கோயில் மதுரை நாயக்கர் காலத்தில் அமைக்கப்பட்ட செய்தி தெரிய வருகிறது.

இம்முருகன் மீது அருணகிரி நாதர் மூன்று பாடல்கள் பாடி உள்ளார். அவைகள் "அழகெறிந்த, சந்திரபிடியதன், நேசாதாரா" என்று தொடங்கும் பாடல்கள் ஆகும்.

84 படிகளை கொண்ட முகப்பில் 16 கால் மண்டபம் உள்ளது. அதைக்கடந்து படிகளில் ஏறி வழியில் உள்ள வலஞ்சுழி விநாயகரைத் தொழுது ராஜகோபுர தோரண வாயிலை அடைந்து வில்வ மர வினாயகரை தரிசனம் செய்யலாம்.

கொடிமர தரிசனத்துடன் இடப்புற வெளிச் சுற்றில் கல்யாண மண்டபம், பைரவர் சன்னதி, நவகிரக சன்னதி, தீர்த்தக்கிணறு, வேம்பு அரசு மேடை, தட்சிணாமூர்த்தி சன்னதி, துர்க்கை அம்மன் சன்னதி, தலவிருட்சம் வில்வம் என பலவற்றை தரிசிக்கலாம்.

கொடிமரம் தாண்டி கிழக்கு வாசல் வழியே நுழைந்தால் வெளிமண்டபத்தில் கணபதி, காசி விசுவநாதர் விசாலாட்சி சன்னதிகளை தரிசிக் கலாம். பிறகு அர்த்த மண்டபத்தில் நுழைந்து வள்ளி தெய்வானையுடன் கூடிய குமரக் கடவுளின் சுந்தரக் கோலத்தை கண்ணா ரக்கண்டு களிக்கலாம்.


இத்திருக்கோயிலில் பிரார்த்தனை திருமணங் கள் அதிக அளவில் நடைபெறுகின்றன. குழந் தை வரம் வேண்டி தொட்டில் கட்டுதல், வீடு கட்டும் பிரார்த்தனை (புதிய செங்கல் மூலம்) முருகன் நிறைவேற்றி வைக்கிறார். மக்களின் குறைகளைத் தீர்த்துவைப்பதால் குறைகள் தீர்க்கும் குன்றத்தூர் முருகன் என்றும் அழைக் கின்றனர்.

### திருக்கோயில் விசேஷ தினங்கள்

1. தமிழ் புத்தாண்டு படிவிழா
2. சித்திரை கிருத்திகை
3. சித்திரை சஷ்டி விழா
4. வைகாசி விசாகம்
5. ஆனி திருமஞ்சனம்



6. ஆடிக்கிருத்திகை
7. ஆடிப்பூரம்
8. விநாயகர் சதுர்த்தி
9. கந்த சஷ்டி விழா 7 நாட்கள்
10. கந்த சஷ்டியில் திருக்கல்யாணம் நிறைவுநாள்
11. திருக்கார்த்திகை தீபம்
12. ஆங்கிலப் புத்தாண்டு

Scan to Read
aanmeegamalar
e-book


13. திருப்புகழ் படிவிழா
14. பொங்கல் திருநாள்
15. தைக்கிருத்திகை
16. தைப்பூசம்
17. மாசிமகம்
18. பங்குனி கிருத்திகை
19. பங்குனி உத்திரம்
20. மாதாந்திர சஷ்டி மற்றும் மாதாந்திர கிருத்திகைகள் என களைகட்டும்.

கோயிலில் பூஜை நேரம்

காலை: 6.30 மணி மாலை: 4 மணிவரை

– சௌமியா சுப்ரமணியன்.
பழைய பல்லாவரம், சென்னை 600117
போன்: 9940460969

# ஆன்மிகமலர்
மெயில் புக்




## இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










## aanmeegamalar.com

## இணையதளத்தை

## பார்க்கவும்









# பெண்களின் ஆரோக்கியத்தை காக்க உதவிய கால் அணிகலன்கள்

பொதுவாக பெண்கள் ஏழு பருவங்களை கடப்பார்கள் என்று நமது மூதாதையர்கள் வரையறுத்துள்ளனர்.

அந்த ஏழு பருவத்தில் ஒவ்வொரு பருவத்துக்கும் ஒரு குறிப்பிட்ட வயதை நிர்ணயித்துள்ளனர்.

அந்தப் பெண்கள்தங்கள் பருவத்துக்குஏற்ப தங்களின் கால் வளையங்களை மாற்றுவார்கள்.

அவ்வாறு அவர்கள் ஒவ்வொருபருவத்தில்மாற்றும் வளையங்களுக்கு ஒவ்வொரு பெயர் உள்ளது.

மேலும் அந்த வளையங்களை வைத்தே பெண்களின் வயதை அக் காலத்தில் கணித்தனர்.


பெரும்பாலானபருவப்பெண்களுக்குதடிமனான தண்டை, கால் காப்பு போன்றவையே அணிந்திருந்தனர்.

தண்டை அணியும் முறை மலை வாழ் மக்களின் கலாசாரத்தில் இன்றும் உள்ளது. கர்ப்பிணி பெண்கள் தண்டை அணிவதன் மூலம் கர்ப்பப்பை இறக்க பிரச்சினை இல்லாமல் இருந்தனர்.

மேலும் இது கல்லீரல், மண்ணீரல், பித்தப்பை, சிறு நீரகம் போன்ற முக்கிய உறுப்புகளின் செயல் திறனையும் தூண்டி விடுகிறது.

குதிகால் நரம்பினைத் தண்டை தொட்டுக் கொண்டிருப்பதால், இந்த நரம்பின் வழியாக மூளைக்கு செல்லும் உணர்ச்சியை கட்டுப்படுத்துகிறது. இதனால் கோபம் மற்றும் உணர்ச்சி வசப்படுதலை குறைக்க முடியும்.

பெரும்பாலும் கொலுசு என்பது திருமணமான பெண்கள் மட்டுமே அணிந்துள்ளனர். அதுவும் வெள்ளியால் ஆன கொலுசை மட்டுமே அணிவர். இந்தியாவில் வெள்ளிக்கு ஒரு தனி மதிப்பு உண்டு. வெள்ளி குளிர்ச்சி தரும் உலோகம். வெள்ளி நகைளை அணிவதால் ஆயுள் விருத்தியாகும் என்று ஆயுர்வேதம் சொல்கிறது. நகை ஒவ்வாமை போன்ற உபாதைகள் வெள்ளியால் வருவதில்லையாம்.




www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

### பெண்களின் வயதும் அவர்களின் பருவத்தையும் அணிந்த கால்வளையமும்

0–12 வயது......... (பேதை) கால் காப்பு
12–24 வயது....... (பெதும்பை) நூபுரம்–கல்வளை
24–36 வயது ...... (மங்கை) கொலுசு
36–48 வயது ...... (மடந்தை) சிலம்பு
48–60 வயது ...... (அரிவை) தண்டை
60–72 வயது ...... (தெரிவை) காலாழி
72 க்கு மேல் ..... (அவ்வை) கழல் கடகம்


# நம்ம ஊரு கோவில்

**உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.**

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

**பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**

தொடர்பு எண்: 9444228203
இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com





# கோமாதா வழிபாடு

கோமாதாவை நாம் தெய்வமாக போற்றும் வழக்கம் இன்றும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. கோமாதாவின் தேகத்தில் சகல தேவர்களும் வாசம் செய்கின்றனர். எனவே, கோமாதாவை பூஜிப்பவர்கள் சகல பாவங்களிலிருந்தும் விடுபட்டு புண்ணியலோகத்தை அடைவார்கள்.

நமது முன்னோர்கள் காலத்தில் இருந்தே இந்த கோமாதா பூஜை நடைபெற்று வருகிறது. இந்த கோமாதா பூஜை செய்வதால் உண்டாகும் பலன்களை பற்றிப் பார்ப்போம்.

குழந்தை பாக்கியம் பெற விரும்புபவர்கள் கோமாதா பூஜை, கோதானம் செய்தால் சிறந்த அறிவுள்ள நல்ல குழந்தைகள் பிறப்பர் என்பது ஐதீகம்.

ஆன்மிகமலர்

கோமாதா பூஜை செய்தால் துன்பங்கள் விலகி இன்பமான வாழ்க்கை அமையும்.

வியாபாரம் விருத்தியடையும். நிலையான இலாபம் கிடைக்கும்.

திருமணம் நடைபெறாதிருந்தாலும், காலதாமதமாகிக் கொண்டே சென்றாலும், நல்ல வரன் அமையவில்லை என்றாலும் இந்த கோமாதா பூஜை அவற்றிற்கு ஒரு நல்ல தீர்வினைத்தரும்.

அதுமட்டுமின்றி நவகிரக பீடை, நவகிரக தோஷம் உள்ளவர்கள் கோபூஜையைச் செய்வது சிறந்த பலனைத்தரும்.

ஆணுக்கு சிறந்த நற்குணமுள்ள பெண் மனைவியாகவும், பெண்ணுக்கு நல்ல ஆண் கணவனாகவும் கிடைக்க இந்த கோமாதா பூஜையை செய்யலாம்.

பிரிந்த கணவன் மனைவி ஒன்றுசேரவும், கணவன் மனைவி ஒற்றுமையுடன் வாழவும் இந்த கோபூஜை செய்வது அவசியமாகும்.

கோமாதா பூஜை செய்தால் நோய் நொடிகள் நீங்கி உடல் ஆரோக்கியம் பெறும். அதுமட்டுமின்றி செல்வச் செழிப்பும், வழக்குகளில் வெற்றியும் உண்டாகும். மேலும், நீங்கள் செய்த பாவங்களும் நீங்கும். இளைத்த கோமாதாவை வாங்கி வளர்த்தாலும் பெரும் புண்ணியம் நம்மைச் சேரும்.

இரக்கமின்றி கோமாதாவை துன்புறுத்துபவர்கள் நரகத்தைச் சேர்வார்கள்.

மேலும், கோமாதாவின் குருதியானது ஒருதுளி இப்புவியில் விழுந்தாலும் அதிலிருந்து பல கோடி அசுரர்கள் வந்துதித்து உலகை நாசம்செய்வார்கள் என்று வேதம் கூறுகிறது. எனவே கோமாதாவை துன்புறுத்தாமல் பாதுகாத்து பூஜை செய்தால் எல்லா நன்மைகளும் உண்டாகும்.

– அமுதா அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி, திருச்சி.
செல்: 9750333265

கட்டாய சந்தா இல்லை!

சப்ஸ்கிரைப் இல்லை!!


மாற்று மத திணிப்பு இல்லை!!!

தரம் மட்டுமே
நமது இதழின் தாரகமந்திரம்,
வியாபார நோக்கத்துடன் செயல்படும்
மற்ற ஆன்மிக இதழுக்கிடையே
சேவையை மட்டுமே நோக்கமாக
கொண்ட ஒரே தரமான
ஆன்மிக இதழ்

ஆன்மிகமலர்.காம் வழங்கும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகம்
ஒரே கிளிக் 170 இதழ்களையும்
டவுன்லோடு செய்து படியுங்கள்

மேலும் விபரங்களுக்கு
aanmeegamalar.com இணையதளத்தை பாருங்கள்

# பந்தம் அறுந்தால் மோட்சம் தெரியும்.




இதயம் துடிக்காத மனிதன் இறந்துவிடுவான் அதே போலவே தத்துவம் என்பது இல்லாத மதம் ஒன்று தன்னை அழித்து கொள்ளும் அல்லது மற்றவர்களை அழிக்கும் கரடுமுரடான நிலபரப்பை உழுது சமபடுத்தி மென்மையாக்கி பயிர் விளைய செய்வது போல தத்துவம் என்பது மிக கடினமான மனித மனங்களை கூட இளம் நுங்கு போல் ஆக்கி விடும் அதனால் தான் இந்தியாவில் தோன்றிய எல்லா மதத்திலும் தத்துவம் என்பது மைய கருபொருளாக உடலை இயக்கம் உயிராக இருந்து வருகிறது அந்த வகையில் ஜைன மதத்தின் தத்துவம் மிக விசாலமானது நுணுக்கமான புரிந்து கொள்ள முடியாத அறிவு கேள்விக்கெல்லாம் ஜைன தத்துவம் தெளிவான பதிலை தருகிறது.

ஜைன தத்துவ ஞானத்தின் அடித்தளம் தோற்றம் மறைதல் இருத்தல் என்ற மூன்று கோட்பாடுகளை கொண்டதாக இருக்கிறது. இந்த மூன்றும் இயற்கையை குறித்த ஆராய்சியின் முடிவாக கருதபடுகிறது. உண்மையில் உள்ளது என்பது கண்ணுக்கெதிரே தெரியும் இருக்கும் பொருள் மட்டுமல்ல பௌதிகமாக தெரிகின்ற பொருள் தான் உண்மை என்று வாதிடுவது ஒரு பக்கத்தை மட்டுமே பார்ப்பதாகும் இப்படி ஒரு சார்புடைய பார்வையை ஜைன தத்துவம் ஏகாந்த வாதம் என்ற பெயரிட்டு அழைக்கிறது. எப்போதும்

எந்த நிலையிலும் மாற்றம் அடையாமல் இருப்பது மட்டுமே உண்மை பொருள் என்று உபநிசதங்கள் கூறுகின்றன இந்த வாதத்தை புத்த மத தத்துவ ஞானிகளும் ஏற்றுகொள்கிறார்கள் ஆனால் ஜைனம் இதை ஏற்க்க மறுக்கிறது.

பொருள்கள் இடத்தில் நிலையான தன்மையும் மாறுபடுகின்ற தன்மையும் ஒருங்கே காணப்படுகிறன மாறாத தன்மைக்கு அடிப்படையாக உள்ள ஒருமைப்பாட்டை கவனத்தில் கொள்ளும் போது பொருள்கள் நித்தியமாகவும் அதாவது அழிவில்லாததாகவும் தெரிகிறது.

அதே நேரம் மாறுபடும் தன்மையை நோக்கும் போது அநித்தியமாகவும் தெரிகிறது. வெவ்வேறு நிலைகளிலிருந்து கவனித்து கூறும் முற்றிலும் முரண் பட்ட ஒன்றுக்கொன்று சம்மந்தம் இல்லாத இரண்டு கருத்துக்களுக்கும் மத்தியஸ்தமான கருத்தை அஸ்தி நாஸ்தி என்று அறிமுகம் செய்கிறது ஜைன தத்துவம் இந்த இரண்டு பார்வைகள் எந்த தத்துவ மரபிலும் இல்லாத புதிய பார்வைகள் என்றே சொல்லலாம்

இது தவிர ஜைன தத்துவத்தில் மட்டுமே சிறப்பாக காணப்படும் மற்றொரு கருத்து திரவியங்களுக்கு ஜைனர்கள் கூறும் புது நோக்குடைய இலக்கண வரம்பு என்று சொல்லலாம் திரவியங்கள் என்பது குணங்களும் பரியாயங்களும் பொருந்தியவைகலாகும் திரவியங்கள் தங்கம் என்றால் அதன் மேல் பூசப்படும் வர்ணங்கள் குணங்களாகும்.

தங்கமும் வர்ணமும் இல்லை என்றால் நகைகள் இல்லை இப்போது திரவியங்களை நித்தியமென்று எடுத்துகொண்டால் பொருளின் வடிவான நகைகளை அநித்தியம் என்று கருதமுடியும் இது தான் திரவியத்தின் இலக்கணத்தில் கூறப்படும் நித்ய அநித்யங்கள்.

மேலும் ஜைன தத்துவம் உலகத்தையும் அதில் காணப்படும் பொருள்களையும் ஜீவன்கள் என்றும் அஜீவன்கள் என்றும் இரண்டுவகையாக பிரிக்கிறது தாவர பொருள்களும் மனிதன் உள்ளிட்ட மிருக வகைகளும் ஜீவ பொருளாகும்.

தாவர பொருள்கள் ஓரறிவு பெற்றவைகளாகும். மிருகங்கள் இரண்டு முதல் ஐந்து வரையில் அறிவை பெற்றிருக்கிறது என்று துணிந்து சொல்லாம். மனம் என்ற ஆறாவது அறிவு உடையவர்கள் மனிதர்கள் சொர்க்கத்தில் உள்ள தேவர்களும் நரகத்தில் உள்ள நரர்களும் மனிதர்கள் என்ற மக்கள் இனத்தை சேர்ந்தவர்கள் தான் இவர்களுக்கும் பிறப்பு இறப்பு




வளர்ச்சி என்ற மூன்று பருவங்கள் உண்டு கர்மங்களின் தொடர்ச்சியான பந்தங்களால் ஆறாவது அறிவை பெற்றவர்களுக்கு பிறப்பும் இறப்பும் மாறி மாறி வந்தமைகிறது.

ஜைன மதம் சொல்லும் இரத்தின திரவியங்கள் என்ற ஒழுக்க நெறிமுறைகளை கடைபிடித்தால் உயிர்கள் பந்தபாச தளையிலிருந்து விடுபட்டு மோட்ச நிலையில் பரமாத்மா நிலையை அடையலாம் இது ஜீவ பொருள்களை பற்றிய ஜைன மதத்தின் கண்ணோட்டமாகும்.

அடுத்ததாக அஜீவ பொருள்களின் தன்மையை பற்றி ஜைன மதம் கூறுவதை கவனிப்போம் அஜீவ பொருள்கள் புத்கலம், ஆகாசம், தர்மம், அதர்மம், காலம் என்று ஐந்து வகைப்படும் இவைகள் அசேதன திரவியங்கள் ஆகும்.

புத்கலத்திற்கு மூலபொருள் பரமாணு பரமாணுக்கள் கூட்டாமாக சேர்ந்து அணுக்களின் கூட்டமைப்பான கந்தங்களை உருவாக்குகிறது. ஆகாசம் என்பது திரவியங்களுக்கு அடைக்கலம் தரும் இடமாகும்.




உலகத்தில் உள்ள பொருள்களுக்கு இடம் தரும் ஆகாசத்தின் பெயர் உலக



ஆகாசம். உலகத்திற்கு அப்பால் இருப்பது அனந்த ஆகாசம் எனப்படும். தர்மம் என்பது ஜீவ புத்கல பொருள்களின் இயக்கத்திற்கு நிமித்த காரணமாக இருக்கிறது. அதே போல அதர்மம் என்பது ஜீவ புத்கல பொருள்களின் நிலைபாட்டிற்கு காரணமாக இருப்பது.

திரவியம் என்பது வளர்ச்சி அடையும் குணத்தை இயற்க்கை இயல்பாக கொண்டதாகும். எனவே தான் இதில் காலம் என்ற ஐந்தாவது தத்துவம் இணைத்து பேசபடுகிறது. காலம் என்பது பிற பொருள்களின் வளர்ச்சிக்கு ஏதுவாக அமைந்தாகும். இதுவும் மற்ற பொருள்களின் வளர்ச்சிக்கு மூல வித்தாக அமைகிறது. புத்கலம் பரமானுக்களால் ஆக்கப்பட்டு இருப்பது போலவே ஆகாசம் ஆகாஷ பரமானுக்களால் உருவாக்கப்பட்டு இருக்கிறது.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு

காலம் கூட காலத்தின் பரமானுக்களால் சூழபட்டிருக்கிறது என்று ஜைன தரிசனம் அறிமுகம் தருகிறது.

ஒவ்வொரு உயிருக்கும் அதனதன் வளர்ச்சிக்கு ஏற்றவாறு உடல்கள் வந்தமைகின்றன இந்த உடல் ஸ்தூல உடல் என்றும் சூட்சம உடல் என்றும் இருவகைப்படும். பிறப்பும் இறப்பும் கண்ணுக்கு தெரியும் ஸ்தூல உடலை சேர்ந்ததாகும்.

சூட்சம உடல் என்பது கர்ம சரீரம் எனப்படும். மனிதர்கள் சம்சார பந்தத்தில் இருந்துவிடுபடும்வரை அவர்கள் கர்ம தழையிளிருந்து விடுதலை அடைய முடியாது.

எனவே அத்தகைய விடுதலையை பெரும் வரை அவர்களுக்கு கர்ம சரீரம் கண்டிப்பாக உண்டு கர்மத்தை அழித்து மோட்சத்தை பெரும் வரைசூட்சம சரீரம் இருந்து கொண்டே இருக்கும்.

மோட்சம் கிட்டும் போது கர்ம சரீரம் தானாக அழிந்து விடும். மனிதர்களின் ஆசைவயபட்ட எண்ணங்கள் பாவ கர்மங்கள் என்று அழைக்கபடுகிறது. பாவ எண்ணங்கள் விலகி சுத்தமான நிர்மல எண்ணங்கள் தோன்றும் போது மனிதன் சுத்தனாகி சித்தனாகி விடுகிறான்.

சம்சார பந்தத்தில் சிக்கி கிடக்கும் உயிர்களின் எண்ணிக்கை அநாதி ஆனது. ஜைன சமையத்தை போலவே மற்ற இந்திய தரிசனங் கள் பலவும் சம்சாரங்களின்எண்ணிக்கை அநாதி என்றே சொல்கின்றன எனவே ஜீவனும் புத்கலமும் சம்சார பந்தத்தின் பிராதான அம்சங்களாகும்.

சம்சார ஜீவன்களை ஆராய்ந்தால்

www.aanmeegamalar.com




அதில் ஜீவன் புத்கலம் ஆகிய இரண்டும் போக மீதியாக ஆசிரவம், சம்வரம், புண்ணியம், பாவம், பந்தம், நிர்ச்சரம், மோட்சம் ஆகிய ஏழு அம்சங்கள் காணப்படுகின்றன. ஆசிரவம் என்பது மனோவிகாரங்களால் கர்ம வினைகள் ஆத்மாவிடம் வந்து சேர்வதாகும்.

இந்த மனோ விகாரங்கள் ராகம் என்ற ஆசை துவேசம் என்ற வெறுப்பு மோகம் என்ற மயக்கம் என்று மூவகைப்படும் சம்வரம் என்பது மனோ விகாரங்கள் ஏற்படாமல் தடுப்பதன் மூலம் தவ சிந்தனையை உருவாக்கி ஆத்மாவை கர்ம வினைகள் அண்டாதவாறு காப்பதாகும்.

விருப்பத்தினாலோ வெறுப்பினாலோ உருவாகும் செயல்கள் பாவ புண்ணியம் என்று அழைக்கப்படும் இந்த இரண்டு வகை செயல்களும் கர்மத்தை வளர்க்குமே தவிர குறைக்காது. அதனால் இவைகளையும் விலக்க வேண்டும்.

கர்ம வினைகள் ஆத்மாவை செயலற பிரித்து நிற்பதையே பந்தம் என்று சொல்வார்கள் இப்படி உருவாகும் பந்தத்தை அறுத்து தூர எரிவதே நிர்ச்சரம் எனப்படும் நிர்ச்சரம் என்பதை ஒருமனிதன் அடைவதற்கு அவன் தவ வழியையோ யோகமார்க்கத்தையோ கையாள வேண்டும். ஆத்மாவை சம்சாரத்தோடு இறுக கட்டிபோடும் கர்ம பந்தத்தை அறுத்து விடுதலை பெற முயற்சிக்கும் ஆத்மாவின் குறிக்கோளே மோட்சம் எனப்படும்.

ஆகவே சுருக்கமாக சொன்னால் ஆத்மா மோட்சம் மோட்ச வழி ஆகிய மூன்றுமே ஜைன தத்துவத்தின் மிக முக்கிய குறிக்கோள் எனலாம்

பொதுவாக தத்துவங்கள் என்பது விரிவாக விசாலமாக ஆராயப்பட வேண்டிய பொருளாகும் அதை சுருக்கமாக தெரிவிக்க முயற்சிக்கும் போது தெளிவில்லாத குழப்பங்களோ புரியாத தண்மையோ இருக்கும் இங்கே கூறப்பட்டிருக்கும் ஜைன தத்துவமும் அதற்கு விதிவிலக்கல்ல எனவே ஜைன தத்துவத்தை விரிவாக அறிந்து கொள்ள வேறொரு சமையத்தை தேர்ந்தெடுத்து கொள்ளலாம் இனி ஜைன மதத்தால் ஏற்பட்ட இலக்கிய வளர்ச்சியை அடுத்த பதிவில் ஆராய்வோம்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
போன்: 09442426434

# ஆன்மீக வழியில் அமைதி




ஈஸ்வரனும் ஜீவனும் ஒன்று என்று வேதாந்தம் கூறுகிறது. நீ அதுவாக இருக்கிறாய் என்றால் 'நீ' என்பது ஜீவன். அது என்றால் ஈஸ்வரன். அதாவது ஜீவன் ஈஸ்வரனாகவும் இருக்கிறான் என்று பொருள். ஈஸ்வர இலட்சணம் ஜீவனின் இலட்சணம் இந்த இரண்டும் சைதனிய ஸ்ரூபத்தில் இரண்டும் ஒன்றுதான் என்று கூறுவது மகாவாக்கியம். எந்த வாக்கியம் ஈஸ்வரனும் ஜீவனும் ஒன்று என்று கூறுகிறதோ அந்த வாக்கியம் மகாவாக்கியம் என்று சாஸ்திரத்தில் கூறப்படுகிறது. இந்த மகாவாக்கியத்தை புரிந்துகொண்டு ஞானம் வரப்பெற்றால் அது சிரவணம் ஆகும்.

உபாதி என்றால் ஸ்தூல சரீரத்தை மனதிலிருந்து நீக்குதல் என்று பொருள். ஒரு பொருள் மற்றொரு பொருள் அருகில் இருக்கும்போது அதனுடைய தன்மையை அடைந்து விடுவதாகும். அதாவது பக்கத்தில் உள்ள பொருளின் தன்மையை அடைந்து விடுவது ஆகும். எடுத்துக்காட்டாக ஒரு ஸ்படிகம் இருக்கிறது. அது தூய்மையான வெண்மை நிறத்தில் இருக்கிறது. அதன் அருகில் பூசுமஞ்சள் கிழங்கை வைக்கும்போது, ஸ்படிகம் முழுதும் மஞ்சள் நிறமாக காட்சி அளிக்கிறது. ஆனால் ஸ்படிகம் உண்மையில் மஞ்சள் நிறமாக இருப்பது இல்லை. அது தூய்மையாக இருப்பது என்பது நமக்குத் தெரியும். ஸ்படிகம் அருகில் பூசுமஞ்சள்கிழங்கை வைத்தவுடன் மஞ்சள் நிறம்போல் ஸ்படிகம் காட்சி அளிக்கிறது அதாவது மஞ்சள் கிழங்கை ஸ்படிகம் அருகில் இருந்து எடுக்கும் வரையில் பூசுமஞ்சள் கிழங்கின் நிறத்தன்மையை ஸ்படிகம் ஈர்த்து மஞ்சள் நிறமாகவே காட்சி அளிக்கிறது.

அதுபோல் ஆத்மா ஸ்படிகம் போன்று தூய்மையானது. ஆனால் ஸ்தூல சரீரம், சூக்ம சரீரம், காரண

71




சரீரம் போன்ற சரீரங்கள் ஆத்மாவின் அருகிலிருப்பதால் ஆத்மா நமது ஸ்தூல, சூக்ம சரீரங்களின் தன்மையை பெற்று விடுகிறது. அதாவது நமது ஆத்மா ஸ்தூல சரீரத்தின் தன்மையை பெற்றுவிடுவதுபோல் நமக்குத் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் ஆத்மா இயல்பாக ஸ்படிகம் போன்று தூய்மையுடையது. ஸ்தூல சரீரம் ஆத்மாவை விட்டு நீங்கும்போது, ஆத்மா ஸ்படிகம் போன்று உண்மையான வெண்மையான தூய்மை நிலையை அடைந்து விடுகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது.

ஒரு வாக்கியம் படிக்கும்போது அல்லது கூறும்போது ஒரு சொல் பலவிதமான பொருளைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக அம்மா விளையாடும் குழந்தையைப் பார்த்து 'மணி ஆறாயிடுச்சு' என்று மட்டும் கூறுகிறார் என்று வைத்துக் கொள்வோம். இதனைக் கேட்பவர்கள் அவர் நேரத்தைக் குறிப்பிடுகிறார் என்று மட்டும் நினைப்பார்கள். ஆனால் அந்தத் தாயின் குழந்தை மட்டும் உடனே தான் விளையாடுவதை விட்டு விட்டு வீட்டுக்குள் வந்து படிக்க ஆரம்பித்து விடும். அதாவது அவர்களுக்குள் ஒரு புரிந்து கொள்ளல் இருக்கிறது. அதாவது குழந்தை ஆறு மணி வரைதான் விளையாட வேண்டும். அதன் பிறகு குழந்தை விளையாடக்கூடாது வீட்டுக்குள் வந்து படிக்க வேண்டும் என்று புரிந்து கொள்ளும் அந்த வாக்கியத்தின் கருத்து ஆகும். அதைப்போல் நமது வாழ்க்கையில் பேசுவது ஒரு வாக்கியமாக இருக்கும் அதனை புரிந்து கொள்வது என்பது வேறுவிதமாக இருக்கும்.

அதேபோல் 'நான்' இருக்கிறேன் 'நான் விளையாடுகிறேன்' என்று கூறும்போது நாம் நமது ஸ்தூல சரீரத்தை மனதில் எண்ணிக்கொண்டுதான் பேசுவோம். அதாவது 'நான்' என்றுதான் பதில் வரும். ஈஸ்வரன் என்று கூறும்போது இந்த பிரபஞ்சம் தோன்றியதற்குக் காரணமான அறிவு ஸ்ரூபமாக, ஆனந்த ஸ்ரூபமாக இருக்கக்கூடியவர் என்று புரிந்து கொள்கிறோம். அவர் மாயையை தனக்குள் வைத்துக் கொள்பவர். அறிவுடன் கூடிய ஆத்மா அனாத்மா என்று கூறப்படுகிறது.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

அகங்காரம் உள்ள சிற்றறிவுடைய மனதிலிருந்து ஜீவனும் அகங்காரமற்ற பேரறிவுள்ள ஈஸ்வரனும் எப்படி ஒன்றாகும் என்றால் ஸ்தூல உடலுடன் கூடிய அகங்காரம் ஜீவனாகவும், அகங்காரமற்றவர் ஈஸ்வரன் என்றும் சாஸ்திரம் கூறுகிறது. 'நீ அதுவாக

இருக்கிறாய்' என்றால் நீ என்பது ஜீவானாகிய நம்மையும் அது என்பது அகங்காரமற்ற அறிவு ஸ்ரூபமான ஆனந்த ஸ்ரூபமான ஈஸ்வரனையும் குறிக்கும்.

'நான்' என்பதை நமது ஸ்தூல சரீரத்தை நினைத்துதான் கூறிக் கொண்டிருக்கிறோம். ஸ்தூல சரீரம் 'நான்' அல்ல என்ற அறிவு நாம் ஞானநிலையை அடைந்த பிறகுதான் புரிந்து கொள்ள முடியும். நாம் அறிவின் துணைகொண்டு நமது ஸ்தூல சரீரத்தை 'நான் அல்ல' என்பதை நமது மனதிலிருந்து அறிவின் துணைகொண்டு ஸ்தூல சரீரத்தை மனதிலிருந்து நீக்கி விட்டு பார்க்கும்போது நாம் ஆத்மா என்று புரிந்து கொள்ள முடியும். ஸ்படிகம் அருகில் உள்ள பூசுமஞ்சள் கிழங்கை எடுத்து விட்டுப் பார்த்தால் உண்மைத் தன்மையை ஸ்படிகத்தின் தூய்மையை அறிந்துகொள்வதைப்போல் நமது அறிவின் துணைகொண்டு நமது ஸ்தூல சரீரத்தை மனதிலிருந்து நீக்கி விட்டுப் பார்த்தால் ஸ்படிகம்போல் உள்ள தூய்மையான ஆத்மாவை மனதால் அறிந்து கொள்வதற்கு முடியும்

www.aanmeegamalar.com

ஈஸ்வரன் என்பவர் அனைத்தையும் அறிந்தவர். இந்த உலகம் உண்டாவதற்குக் காரணமானவர். இந்த பிரபஞ்சத்தைப் படைத்தவர் என்று புரிந்து கொண்டுள்ளோம். ஈஸ்வரனுடன் சேர்ந்துள்ள மாயை அதாவது இந்த பிரபஞ்சத்தை மனதிலிருந்து நீக்கிவிட்டு பார்த்தால், ஆத்மா அங்கு அறிவு ஸ்ரூபமாக ஆனந்த ஸ்ரூபமாக இருப்பதை உணரலாம். ஜீவனும் ஈஸ்வரனும் ஒன்று என்பதை அறிவின் துணைகொண்டு அதாவது நமது மனதளவில் நீக்கி விட்டு பார்த்தால் ஆத்மா அங்கு அறிவு ஸ்ரூபமாக ஆனந்த ஸ்ரூபமாக இருப்பதை நாம் உணரலாம். ஜீவனும் ஈஸ்வரனும் ஒன்று என்பதை மாயை என்பதை நீக்கி விட்டு ஞானநிலையில் பார்க்கும்போது ஈஸ்வரனும் ஜீவனும் ஒன்றுதான் என்று புரிந்து கொள்ள முடியும்.

ஆனால் நாம் அறியாமையின் காரணமாக ஈஸ்வரனும் ஜீவனும் வேறுவேறு என்று தவறாக எண்ணிக்கொண்டிருக்கிறோம். மனிதர்கள் பலவித காரணங்களால் தவறுகள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு மனிதன் அறியாமையால் தவறு செய்யலாம். மனிதன் சந்தேகத்தின் காரணமாக தவறு செய்யலாம். மனிதன் பழக்கதோஷத்தினால் தவறுகள் செய்யலாம்.

ஒருவர் ஒரு தவறு செய்து விடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். எடுத்துக்காட்டாக ஒருவர் வீட்டில் உள்ள பீரோவில் புத்தகங்களை அடுக்கி



வைத்திருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அதில் இருக்கும் ஒரு புத்தகத்தை குறிப்பிட்ட இடத்திலிருந்து அவர் எடுத்து நாள்தோறும் படித்து விட்டு எடுத்த இடத்தில் வைத்து விடுகிறார். அவர் திடீரென்று புத்தகங்களை வேறொரு இடத்தில் உள்ள பீரோவிற்கு மாற்றி விடுகிறார். இப்போது அவர் வழக்கம்போல் தான் படித்த புத்தகத்தை தேடி பழைய பீரோ இருந்த இடத்துக்கு சென்று தேடி பார்க்கிறார்.

அவரது இந்த செயல் அவரது அறியாமையின் காரணமாக செய்கிறாரா? அல்லது சந்தேகத்தின் காரணமாக செய்கிறாரா? என்றால் இரண்டும் காரணம் அல்ல. ஏன் என்றால் புத்தகங்களை வேறு ஒரு பீரோவில் மாற்றி வைத்தது அவருக்குத் தெரியும்.

அவர் எதற்காக அந்த தவறை செய்கிறார் என்றால் வழக்கமாக அவர் பழைய பீரோவுக்கு அடிக்கடி சென்று புத்தகத்தை எடுத்திருப்பதால் அது அவர் மனதில் இயல்பாக பதிந்து விட்டது. இதனை உலக வழக்கில் பழக்கதோஷம் என்று கூறுவதைக் கேட்டு இருப்போம். இதை சாஸ்திரத்தில் விபரீத பாவனை என்று கூறப்படுகிறது. நம்மை

அறியாமல் நமது பழக்கதோஷத்தால் இந்த தவறு நிகழ்ந்து விடுகிறது.

மனிதர்களின் தவறுக்கு பொதுவாக அறியாமை, சந்தேகப்படுதல், பழக்கதோஷம் என மூன்று காரணங்கள்தான் இருக்க முடியும். இந்த பழக்கதோஷத்தினால் வரக்கூடிய தவறுகளிலிருந்து எப்படி வெளி வருவது. பழைய பீரோ இருக்கும் இடத்திற்கு சென்று வருவதைப்போல் புதிய பீரோ இருக்கும் இடத்திற்கு அதேபோன்று அடிக்கடி சென்று வர வேண்டும். அவ்வாறு நமது பழக்கவழக்கங்களை நிகழ்கால பழக்கத்துக்கு மாற்றும்போது பழக்கதோஷத்தின் மூலம் வரும் தவறுகளிலிருந்து நாம் எளிதில் வெளி வந்து விடலாம்.

'நான்' என்பது இந்த ஸ்தூல உடல் என்று நினைத்து சொல்லிக் கொண்டிருந்தோம். இது நமது பழக்கதோஷத்தினால் வந்த தவறு என்று கூறலாம். நம் அனைவரிடமும் ஆத்மா என்பது உள்ளது. அதனை நமது அறியாமல் நாம் உணர்ந்து கொள்ள முடியாமல் இருக்கிறோம். அதனை உணர வேண்டும் என்றால் தியானம் ஜபம், பஜனை போன்றவைகளில் நமது மனம் முழு ஈடுபாட்டுடன் பயிற்சி மேற்கொள்ள வேண்டும். ஊறுகாய் போன்று நமது மனதை ஞானத்தில் மூழ்கி இருக்க வேண்டும். நெல்லிக்காய் ஊறுகாய் ஊறியபின் எப்படி மிருதுவாக பக்குவநிலைக்கு வருகிறதோ அதுபோல் நமது மனதை பக்குவப்படுத்தி ஞானநிலைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

ஞானத்தின் பலன்கள் மோட்சம் அல்லது முக்தி நிலையாகும். இந்த முக்திநிலை ஜீவ முக்தி, விதேக முக்தி என இரண்டாக சாஸ்திரத்தில் பிரிக்கப்படுகிறது. ஜீவ முக்தி என்பது உயிரோடு இருக்கும்போது முக்தி நிலை அடைவது. விதேக முக்தி என்பது உயிர் பிரிந்த பிறகு முக்திநிலை அடைவது. முக்தி நிலையை துயரங்களில் இருந்து விடுதலை என்றும் குறிப்பிடலாம்.

நாம் தியானம், ஜபம், பஜனை போன்ற ஆன்மீக பயிற்சியில் ஈடுபடும்போது நாம் எந்தவிதமான தவறுகள் செய்யாமல் இயல்பாக இருக்க முடியும். அறியாமையாலோ சந்தேகத்தலோ பழக்கதோஷத்தாலோ தவறுகள் செய்வதிலிருந்து விடுபடுவதற்கு முடியும். ஆன்மீக பயிற்சியில் உடலும் உள்ளமும் முழுமையாக ஈடுபடுவதன் மூலம் கோபம், பொறாமை, ஆசை போன்ற தீய எண்ணங்கள் மற்றும் தீய செயல்பாடுகள் எல்லாம் நம்மை விட்டு நம்மை அறியாமல் அகன்று விடும். அப்போது நாம் விரும்பித் தேடும் மன அமைதி இயல்பாக வந்து விடும்.

விதேக முக்தி என்பது ஞான யோகத்தின் மூலம் சத்துவ, ரஜோ, தமோ என்ற முக்குணங்களை கடந்த ஜீவன், ஆத்ம ஞானத்தில் நிலைபெற்று பிரம்மத்தில் ஐக்கியமாகி விடுவதே விதேக முக்தி என்று சாஸ்திரம் கூறுகிறது. இந்த விதேக முக்தி அடைந்த ஒருவருக்கு அவர் மறைந்த பிறகு அவருக்கு மறுபிறவி என்பது கிடையாது. அத்தகைய மறுபிறவி அற்ற நிலையை அடைந்தவர்களை விதேக முக்தன் என்று கூறுவார்கள்.

ஜீவமுக்தி அடையும் யோகி முதலில் புனிதமானதை அடைய இச்சை/விருப்பம் உள்ளவனாக இருக்கிறான். இரண்டாவதாக சுயமாக பயனுள்ள ஆன்மீக நூல்களைப் படிப்பதானாலும், நல்லோர்களின் கூட்டுறவாலும் உண்மையை அறிந்து கொள்வதற்கு முற்படுகிறான். இந்த உண்மை/ மாயை போன்ற நிலைகளை யோகி அறிந்து செயல்படுகிறான். அவ்வாறு யோகியானவர் செயல்படும்போது மூன்றாவது நிலையில் அமைதியான மனதினை உடையவனாகிறான். அதாவது அவர் மோனநிலையை அடைந்து விடுகிறார்.

இத்தகைய அமைதியான மனநிலையை யோகி அடைந்து முதல் மூன்று நிலைகளில் அவர் எடுத்த இடைவிடாத முயற்சியால் தன்னையும் அறிந்து கொள்கிறான். அவ்வாறு அவன் தன்னை அறிந்த பிறகு அடுத்த நான்காவது நிலையில் பராமாத்மா குறித்த ஞானத்தை அடைகிறான். இந்த நான்கு நிலைகளில் பெறப்படும் ஞானத்தால் யோகி ஐந்தாவது நிலையில் தனக்கும் உலகிற்கும் உள்ள பற்றை இயல்பாக துறக்கிறான். அவ்வாறு பற்றறுத்து ஆத்ம ஞானத்தை அடைந்த யோகி பேதங்களற்ற நிலையில் தன்னையே துறக்கிறான். ஏழாவது நிலையில் உலக வாழ்வை கடந்தவனாக முக்திநிலை அடைந்தவனாகிறான்.

ஆன்மீகத்தில் ஈடுபாடுள்ள நல்லவர்களின் உறவால் உண்மை உணரப்பட்டு பற்றற்று நிலை ஏற்படுகிறது. பற்றறுத்ததனால் மாயையினால் உண்டாகும் மோகத்திலிருந்து ஜீவனுக்கு விடுதலை கிடைக்கிறது. மோகத்திலிருந்து விடுபட்டதனால் அமைதி கிடைக்கிறது. அமைதியிலிருந்து ஜீவன் முக்தி அடையப்படுகிறது. என்று ஸ்ரீ சங்கரர் பஜகோவிந்த மூலம் தெளிவுபடுத்தி அறிவுறுத்துகிறார். .

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

# அறியாமை என்பதுதான் அறிவு ஆகிறது என்பதே ஹிந்து மதம்

சீடன்: துன்பம் எப்பொழுது தெரிகிறது?

ஞானி: கடவுளின் நிழல் கிடைக்காதபொழுது..

சீடன்: பக்தன் ஆவது எப்பொழுது?

ஞானி: நம்மை நாமே சோதித்துக் கொள்ளும்போது.

சீடன்: வர்க்கங்கள் தோன்றியது எப்பொழுது?

ஞானி: பாசம் நம் அறிவை தடுக்கும்போது.

சீடன்: கடவுள் மகிழ்வது எப்பொழுது?

ஞானி: மனிதனுக்கு மனிதன் தொண்டு செய்யும்போது.

சீடன்: திருவிழாக்கள் எதற்கு உபயோகம்?

ஞானி: மனிதனின் கவலையை நீக்க ஒரு வாய்ப்பு பக்தர்கள் வாழ்வு முழுதும் கொண்டாட்ட திருவிழாதான்.

சீடன்: கொண்டாட்டங்களை எப்படி அணுகுவது?

ஞானி: அடுத்தவர்களுடன் பகிர்ந்து கொள். அதுவே தவமாகிறது.

சீடன்: குரு எப்படிப்பட்டவர்?

ஞானி: கபடு, சூது இல்லாதவன்தான் குருவாக முடியும்.

சீடன்: முழுமை என்பது பக்தி மார்க்கத்தில் எப்படி?

ஞானி: தத்துவத்தின் வழி கடவுளை எண்ணி தத்துவத்தின் வழி சிந்தனையில் நுழைந்து அதிலிருந்தும் வெளிவந்த நிலை.

சீடன்: ஆயிரம் தெய்வங்கள் உள்ளனவே?

ஞானி: அதுவே மனிதனின் வலிமை.

சீடன்: கடவுள் மனிதனுக்கு அளித்த வரங்கள் எவை?

ஞானி: (சிரித்தபடி) தூக்கமும், விழிப்பும்.

சீடன்: மனிதன் என்பவன் யார்?

ஞானி: உன் குற்றங்களை சுட்டிக் காட்டுபவன்.

சீடன்: குரு என்பவர் யார்?

ஞானி: மறுமுறை அக்குற்றம் செய்யமாலிருக்க வழி காட்டுபவன்.

சீடன்: சங்கம் என்பது என்ன?

ஞானி: மனிதனின் உள்ளம்.

சீடன்: மதம் என்பது என்ன?

ஞானி: வித்தியாசமாக சிந்திக்கும் தன்மை.

சீடன்: தொண்டன் என்பவன் யார்?

ஞானி: தொண்டு செய்தால் அழிந்து விடுவோம் என்று தெரிந்தும் தொண்டு செய்பவன்.

சீடன்: ஹிந்து மதம் சொல்வது என்ன?

ஞானி: அறியாமை என்பதுதான் அறிவு ஆகிறது என்பதே ஹிந்து மதம்.

சீடன்: ஹிந்து மதத்தை புரிந்து கொண்டால்?

ஞானி: ஆன்மீகவாதியாகவோ சிந்தனையாளனாகவோ ஆவாய்.

சீடன்: சுத்தமான பக்கம் எது?

ஞானி: உள்பக்கத்தில் யார் இருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்வது.



சீடன்: தியானம் என்றால் என்ன?

ஞானி: அசாந்தியைப் போக்கி சாந்தியைக் கொண்டு வருவது.

சீடன்: வழிபாடு எப்பொழுது எளிதாகிறது?

ஞானி:தெரிந்து கொண்டு செய்வது.

சீடன்: குரு எப்படிப்பட்டவர்?

ஞானி: கபடு, சூது இல்லாதவன் தான் குருவாக முடியும்.

www.aanmeegamalar.com



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா
வேல் செல்
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

சீடன்: முழுமை என்பது பக்தி மார்க்கத்தில் எப்படி?

ஞானி: தத்துவத்தின் வழி கடவுளை எண்ணி தத்துவத்தின் வழி சிந்தனையில் நுழைந்து அதிலிருந்தும் வெளிவந்த நிலை.

சீடன்: ஆயிரம் தெய்வங்கள் உள்ளனவே?

ஞானி: அதுவே மனிதனின் வலிமை.

சீடன்: கடவுள் மனிதனுக்கு அளித்த வரங்கள் எவை?

ஞானி: (சிரித்தபடி) தூக்கமும், விழிப்பும்.

சீடன்: மனிதன் என்பவன் யார்?

ஞானி: உன் குற்றங்களை சுட்டிக் காட்டுபவன்.

சீடன்: குரு என்பவர் யார்?

ஞானி: மறுமுறை அக்குற்றம் செய்யமாலிருக்க வழி காட்டுபவன்.

சீடன்: சங்கம் என்பது என்ன?

ஞானி: மனிதனின் உள்ளம்.

சீடன்: மதம் என்பது என்ன?

ஞானி: வித்தியாசமாக சிந்திக்கும் தன்மை.

சீடன்: தொண்டன் என்பவன் யார்?

ஞானி: தொண்டு செய்தால் அழிந்து விடுவோம் என்று தெரிந்தும் தொண்டு செய்பவன்.

சீடன்: ஹிந்து மதம் சொல்வது என்ன?

ஞானி: அறியாமை என்பதுதான் அறிவு ஆகிறது என்பதே ஹிந்து மதம்.

சீடன்: ஹிந்து மதத்தை புரிந்து கொண்டால்?

ஞானி: ஆன்மீகவாதியாகவோ சிந்தனையாளனாகவோ ஆவாய்.

சீடன்: சுத்தமான பக்கம் எது?

ஞானி: உள்பக்கத்தில் யார் இருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்வது.

சீடன்: தியானம் என்றால் என்ன?

ஞானி: அசாந்தியைப் போக்கி சாந்தியைக் கொண்டு வருவது.

சீடன்: வழிபாடு எப்பொழுது எளிதாகிறது?

ஞானி: தெரிந்து கொண்டு செய்வது.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
அழகுராஜா எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# உயிர்கள் அனைத்தையும் அமிர்த குடத்திலிட்டு காத்த

# சிவபெருமான்





அரனார் புகழினை அகிலத்திற்கு உணர்த்தும் அற்புதம் மிகுந்த திருத்தலங்கள் பற்பல உள்ளது இப்பூலகில். அவ்வாறு அறியப்பெறும் தலங்களுள் ஒன்றாய் அருள்மணம் கமழ்கின்றது குடவாயில் என்னும் குடவாசல். சோழ நாட்டின் தேவாரத் தலங்களுள் காவிரித் தென்கரையின் 94 வது திருத்தலமாக போற்றப்படுகின்றது.

சோழ சாம்ராஜ்ஜியத்தின் 24 கோட்டங்களுல் முக்கிய கோட்டமாகத் திகழ்ந்துள்ளது இந்த குடவாயில் கோட்டம். சோழர்களின் கருவூலமாக வும் திகழ்ந்த ஊரிது. குடக்கு எனில் மேற்கு என்பது பொருள். மேற்கு வாயில் கொண்ட தலம் என்பதனால் இத்தலத்திற்கு குடவாயில் என்று பெயர் வந்தது. நாளடைவில் மருவி தற்போது குடவாசல் என்று வழங்கப்படுகிறது.

இத்தலத்திற்கு கதலிவனம், கோணத்தானம், கருடாத்ரி, வன்மீகாசலம் போன்ற வேறு பெயர் களும் உண்டு.

ஊழிக்காலத்தில் உயிர்கள் அனைத்தையும் அமிர்த குடத்திலிட்டு, குடத்தின் வாயிலில் சிவலிங்க ஸ்வரூபமாக இருந்து இறைவன் காத்தமையால் இத்தல பெருமான் கோ நேசர் என அழைக்களானார். அமிர்த கலசத்தின் வாயிலில் உண்டான சிவலிங்கத் திருமேனியை காலத்தின் கோலத்தால் புற்றுமண் மூடியது. அமிர்தத்தைத் தேடி அலைந்த கருடன், இங்குள்ள புற்றுமண்ணைத் தன் அலகினால் கிளற, அதிலிருந்து இறைவன் வெளிப்பட்டு, கருடனுக்கு அமிர்தத்தை அளித்தார். அதை கொண்டு கருடன் தன் தாயின் அவமானத்தைத்




துடைத்தார். இதுவே இத்தலத்தின் புராண நிகழ்வாகும்.

ஊழிக்குப் பின்னர் படைப்புத் தொழிலின் போது அமிர்தகுட மூன்றாக உடைந்தது. அதன் அடிப்பாகம் விழுந்த இடம் ஆதிகும்பேஸ்வரமாகவும் (கும்பகோணம்), நடுப்பாகம் விழுந்த இடம் கடேஸ்வரமாகவும் (கலயநல்லூர் என்னும் சாக்கோட்டை), முகப்பாகம் விழுந்த இடம் கோணேஸ்வரமாகவும் (குடவாயில் என்னும் குடவாசல்) ஆனது. மூன்று பொழுதுகளில் இது நடந்ததால்....காலையில் கும்பகோணத்திலும், மத்தியத்தில் சாக்கோட்டையிலும், மாலையில் குடவாசலிலும் வழிபடுவது சாலச் சிறந்தது என்பது இங்கு நிலவும் நம்பிக்கையாகும்.

www.aanmeegamalar.com

சூரியன், பிருகு முனிவர், தாலப்பிய முனிவர், சூதமா முனிவர் போன்றோர் இத்தல ஈசனை வழிபட்டுள்ளனர். திருமணபிந்து என்னும் முனிவர் இப்பெருமானை வணங்கி, தொழுநோய் நீங்கப் பெற்றுள்ளார். புறநானூறு மற்றும் அகநானூற்றில் இடம்பெற்றுள்ள இப்பதி மீது திருஞானசம்பந்தர் இரண்டு பதிகங்களைப் பாடி போற்றியுள்ளார். அப்பர் பெருமான் தனது க்ஷேத்திரக்கோவையில் இக்கோவிலை வைப்புத்தலமாக வைத்துப் பாடியுள்ளார்.

பெருந்திருக்கோவில்களுல் ஒன்றாய்த் திகழும் இத்தலத்தின் தேவாரப் பாடல்களில்.....வேதாகம நெறியில் விளங்கும் இக்கோவிலில் திருவிழாக்கள் பல பொலிவுற்றுத் திகழ்ந்ததாகவும், குடியார்ந்த மாமறையோர்கள் தொழுதுபரவும் பதியயெனவும், ஈசன் விரும்பி இருக்கும் இடம்மென்றும் பலவாறு போற்றியுள்ளார் ஆளுடையப் பிள்ளையார். அருணகிரி நாதர் இத்தல முருகன் மீது திருப்புகழ் பாமாலை ஒன்றை சூட்டியுள்ளார். பெருமைமிக்க இப்பதி அரனார் உறையும் அருள் வீடென்றால் அது மெய்யே...!

பேரூராகத் திகழும் குடவாசலின் மையமாக திருக்குளத்துடன் பிரம்மாண்டமாக திகழ்கிறது கோணேஸ்வரர் திருக்கோவில். சாலை ஓரமாக அமிர்தம் தேங்கிய அமிர்த தீர்த்தம் என்னும் திருக்குளம் சுற்று மதில்கள் கொண்டு, படிகளுடன் காட்சியளிக்கின்றது. குளக்கரையில் "ஆதி கஜானனர்" அருள் வழங்குகின்றார்.

மேற்கு முகம் பார்த்த ஆலயம். நுழைவு வாயிலின் மேல் இராஜகோபுரம் கிடையாது. தோரணவாயிலாக உள்ளது. மேலே பஞ்சமூர்த்திகளின் பரவச தரிசனம்.

உள்ளே....முதலில் தென்திசை நோக்கும் அம்பிகை சன்னிதி வருகின்றது. சிறு முகமண்டபம், அர்த்தமண்டபம், கருவறை அமைப்பினில் அம்பாள் சன்னதியுள்ளது. கருவறையில் அருள் சுரக்கும் நாயகியாய் நமக்கு அருட்காட்சி அளிக்கின்றாள் அன்னை ஸ்ரீ பிரஹன்நாயகி. செந்தமிழில் பெரியநாயகி என்று போற்றுவர். மேலிரு கரங்களில் அக்கமாலை மற்றும் தாமரையுடனும், கீழ் வலக்கரம் அபய அஸ்தமாகவும், இடக்கரம் துர்க்கையைப் போன்று இடுப்பில் மடித்தபடி கடிகாஸ்த்தமாகவும் திகழ, புன்னகை சிந்தியவண்ணம் பூரிப்படையச் செய்கின்றாள்.


மோ.கணேஷ்

அன்னையின் திருச்சன்னிதிக்கு வெளியே எதிர்ப்புறம் தூண்கள் பல கொண்ட அலங்கார மண்டபம். நடுவே சுவாமியை நோக்கிய கொடிமரம், நந்தி, பலிபீடம் ஆகியன காட்சி தருகின்றது. இங்கே அனுமதி விநாயகர் அருட்காட்சி அருளுகின்றார். இவரது அனுமதி பெற்ற பின்னர் இரண்டாம் வாயை அடைகின்றோம். இவ்வாயிலின் மேல் அழகிய மூன்று நிலை இராஜகோபுரம் கண் கவர்கின்றது.

www.aanmeegamalar.com

அதனுள் நுழைய, தென்முகம் பார்த்தவாறு நடராஜர் சிவகாமியம்மை சன்னிதி தில்லை விமான அமைப்பினை கொண்டு விளங்குகிறது. அதற்கடுத்து உயர்ந்த மாடக்கோவிலாக சுவாமி சன்னிதி 24 படிகளுடன் பிரம்மிப்பூட்டுகின்றது.

கிழே தரையில் திருமாளிகை பத்தியில் கிழக்கு நோக்கியவாறு இரட்டைவிநாயகர், நால்வர், பரவைநாச்சியார் உடனான ஆலாலசுந்தரர், இடும்பன், பாலதண்டாயுதபாணி, கஜலட்சுமி, சரஸ்வதி ஆகியோருடன் தனிசன்னதியுள் தெய்வானை மற்றும் வள்ளியுடன் ஸ்ரீ சுப்பிரமணியம் அருள்பாலிக்கின்றனர். கோவிலின் கீழ்ப்புறம் சண்டேசர் சன்னதியியுள்ளது.

கிழக்குத் திருமாலிகை பத்தியில்...மேற்கு நோக்கியவாறு இரட்டை பைரவர், சந்திரன், சூரியன், ரிஷிலிங்கங்கள், நாகராஜர், சப்த மாதாக்கள், ஏகபாத மூர்த்தி அணி செய்துள்ளனர். நவக்கிரகங்களும் இங்குள்ளது. தலகணபதி மேற்கு நோக்கியவண்ணம் கம்பீரமாக கருணை புரிகின்றார்.

கோஷ்டங்களில் தென்மாடத்தில் மட்டும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி வீற்றிருள்கின்றார். ஏனைய மாடங்களில் தெய்வச் சிலைகள் இல்லை. கோச்செங்கட்சோழனால் எழுப்பப்பட மிக உயரிய மாடக் கோவில்களில் இதுவும் ஒன்று.

கருங்கல்லால் அமைக்கப்பட்ட கலையெழில் கொஞ்சும் பிரம்மாண்டமான கட்டுமலையின் மீது அனாதியாய் விளங்கும் அரனார் சன்னிதி மட்டும் தனித்து அமைந்திருக்கின்றது.

அகலமான படிகள் இருபத்து நான்கினில் ஏறிய பின், தென் வாயிலுள் நுழைந்து, மகா மண்டபத்தை அடைகின்றோம். அடுத்து அர்த்தமண்டபம்.

பின் மூலஸ்தானம். கருவறையில் கருணாத யாளராய் காட்சியளிக்கின்றார் ஸ்ரீ கோணேஸ்வரர். அமிர்த லிங்கமான இவரது பாணத்தில் கருடனின் நகக் கீறல்கள் தென்படுகின்றது. பேரருள் புரியும் இப்பெருமானது தரிசனம் திருக்கயிலை தரிசனப் பலனை தரும் என்பதில் ஐயமொன்றும் இல்லை. இத்தல பெருமான் ஸ்ரீ சூர்யேஸ்வரர், தாலப்பியேஸ்வரர், பிருகுநாதர், வன்மீகாசலேஸ்வரர் போன்ற பெயர்களையும் உடையவர்.

சுவாமி விமானம் அதியற்புதமான கலைப் பொக்கிஷமாக நமக்கு அருள் தருகின்றது. சுவாமி சன்னிதியை வலம் வர வழியும் விடப்பட்டுள்ளது. தல விருக்ஷமாக வாழைமரம் விளங்குகின்றது.

ஆலயமெங்கும் வித்தியாசங்களையும், வியப்புகளையும் கண்ணுறுகின்றோம். பழங்கால சோழர் கல்வெட்டுகள் இங்கு ஆலயத்தில் ஆங்காங்கே காணப்படுகின்றன.

இந்து சமய அறநிலைத்துறை சார்ந்த இவ்வாலயத்தில் தினமும் ஐந்து வேலைகள் பூஜை நடத்தப்படுகின்றன. தினமும் காலை 6 மணி முதல் 12 மணி வரையும், மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரையும் ஆலய நடை திறந்திருக்கும்.

அனைத்து சிவாலய விஷேடங்களும் சிறப்புடன் நடத்தப்படுகின்றன. மாசிமகம் தொடங்கி 10 தினங்கள் கொடியேற்றத்துடன் பிரம்மோற்சவம் மிகவும் சிறப்புற அனுசரிக்கப்படுகின்றன. சனி பிரதோஷம் இங்கு மிகவும் பிரசித்தம்.

இங்கு அம்பிகையே துர்கையாகத் திகழ்வதால் இக்கோயிலில் தனியாக துர்கை கிடையாது. இத்தல அம்பாளுக்கு ஞாயிறு, செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் இராகு காலத்தில் அபிஷேகம் நடத்தி, எலுமிச்சம்பழத்தால் விளக்கேற்றி அர்ச்சிக்க... திருமணபிரார்த்தி, பிள்ளைப்பேறு, தொழில் விருத்தி, எதிரிநாசம் போன்றவைகள் கிட்டும் என்று இங்கு வழிபடும் அன்பர்கள் கூறுகின்றனர். சனி பிரதோஷம் மற்றும் கார்த்திகை திங்கள் ஆகிய வேளைகளில் இங்கு வழிபட...சிவப்பேறு கிட்டுவது உறுதி.

இக்குடவாயில் (மேற்கு வாசல்) பெருமானை வணங்கிட, கயிலை சென்று கயிலாயநாதனை வணங்கிய திருவருள் கிட்டும். இத்தலத்தை நினைத்து ஓர் அடி எடுத்து வைத்தால் கூட சிவனாகலாம். ஒரு நொடி இத்தலத்தினில் தங்கினால் கூட சிவலோகபிராப்தி கிட்டும் என சிவமகாபுராணம் எடுத்தியம்புகின்றது.

திருவாரூர் மாவட்டத்தில் ஓர் முக்கிய தாலுகாவாகத் திகழும் இக்குடவாசல், கும்ப கோணம் திருவாரூர் வழித்தடத்தில் பேரூராக அமைந்துள்ளது.

– பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்பு எண்: 9789156179

# தர்மவான்களுக்குரிய கடமைகள்

நமது இந்து தர்ம சாஸ்திரத்தில் நமது முன்னோர்களுக்கு தர்மவான்கள் என்று அடையாளம் சொல்ல முப்பத்து இரண்டு வகையான தர்மங்களை சொல்லியிருக்கிறார்கள்.

அந்த முப்பத்து இரண்டு அறங்கள் எது என்று உங்களுக்கு தெரியுமா?




1. ஏழைகளுக்கான தர்ம விடுதி (ஆதுலர் சாலை)
2. ஓதுவார்க்கு உணவு படிக்கிற பிள்ளைகளுக்கு உணவு
3. அறு சமயத்தார்க்கு உணவு அனைத்து சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் உணவு
4. பசுக்கு உணவு.
5. சிறைச் சோறு சிறையிலிருக்கும் அனைவருக்கும் உணவு
6. ஐயம் பிச்சையிடல்
7. திண்பண்டம் வழங்கல்
8. அறவைச் சோறு அனாதைகளுக்கு உணவளித்தல்
9. மகப்பெறுவித்தல் பிரசவம் பார்த்தல்
10. மகவு வளர்த்தல் குழந்தைகள் வளர்த்தல்
11. மகப்பால் வளர்த்தல் குழந்தைகளுக்குப் பால் வழங்குதல்
12. அறவைப் பிணஞ்சுடுதல் அனாதைப் பிரேதங்களை அடக்கம் செய்தல்
13. அறவைத் தூரியம் அனாதைகளுக்கு உடையளித்தல்
14. சுண்ணம் வெள்ளை கொத்தல்.
15. நோய் மருந்து வைத்தியம்
16. வண்ணார் ஏழைகளுக்கு இலவசமாகத் துணி வெளுத்தல்
17. நாவிதர் ஏழைகளுக்கு இலவசமாகச் சவரம் செய்தல்
18. கண்ணாடி முகம் பார்க்கும் கண்ணாடி உள்ளே முத்துக் கண்ணாடி
19. காதோலை
20. கண் வைத்தியம்
21. தலைக்கெண்ணெய்
22. பெண்போகம் காம நோயால் இறந்து படும் திக்கற்றவர்களுக்கு உதவுதல்
23. பிறர் துயர்காத்தல்
24. தண்ணீர்ப் பந்தல்
25. மடம் (சத்திரம்)
26. தடம் (சாலை அமைத்தல்)
27. சோலை (கோட்டம் வளர்த்தல்)
28. ஆவுரிஞ்கதறி பசுமாடுகள் உடம்பைத் தேய்த்துக் கொள்ள மந்தைவெளியில் கல் நடுதல்
29. விலங்கிற்கு உணவு சக்தியற்ற எல்லாவிதமான விலங்குகளுக்கும் உணவளித்தல்
30. ஏறுவிடுதல் நல்ல ஜாதி மாடுகளை விருத்தி செய்ய, பொலி காளைகளை இலவசமாய் விடுதல்
31. விலை கொடுத்து உயிர் விடுதல் விலை கொடுத்தாகிலும் உயிர்களைக் காப்பாற்றுதல்
32. கன்னிகாதானம் கல்யாணம் செய்து வைத்தல்



## நல்லவருக்கு நல்லவன், கெட்டவனுக்குக் கெட்டவன்
## விநாயகர் முன் செய்யும் சத்தியவாக்கை ஏற்கும் பஞ்சாயத்து

# காணிப்பிள்ளையாரின் சக்தி

ஒவ்வொரு கோவிலுக்கும் பொதுவாக ஒரு அதிசயம் இருக்கும். அவை கடவுளின் சக்தியால் நடக்கிறது என்பது நமது நம்பிக்கை.

500 ஆண்டுகள் மிக பழமை வாய்ந்த இந்த ஸ்ரீவரசித்தி விநாயகர் கோவில் ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் காணிப்பாக்கத்தில் எழில்மிகு அழகோடு உள்ளது.

இங்கு, இந்த அதிசய ஸ்ரீவரசித்தி விநாயகர் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். வரசித்தி விநாயகர் சுயம்புவாக தோன்றிய கிணறு இப்போதும் உள்ளது.

இக்கிணற்றில் இருந்து எடுக்கப்படும் தண்ணீர்தான் இன்றைக்கும் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகிறது.

### விநாயகரின் மகிமை!

ஆந்திராவின் சித்தூருக்கு அருகில் உள்ள காணிப்பாக்கம் வரசித்தி விநாயகர் கோயிலில் பிரசாதம் ஒரு ஸ்பூன் தண்ணீர்! அதுவும் கிணற்று நீர்!

அந்த ஒரு உத்தரணி தண்ணீரைப் பெற்றுக் கொள்ளத்தான் அங்கே கூட்டம் அலை மோதுகிறது. அதனைப் பருகினால் ஊனம் தீரும் என்றும் நோய்கள் எல்லாம் நீங்கும் என்பதும் பக்தர்களின் நம்பிக்கை.

காணிப்பாக்கம் வரசித்தி விநாயகர் தோன்றியதே அந்தக் கிணற்றில்தான்! இன்றும் அதே கிணற்றின் மேல்தான் அவர் காட்சி தருகிறார். அது மட்டுமல்ல, இந்தக் காணிப்பாக்கம் விநாயகரைச் சுற்றி கிணற்று நீர் எப்போதும் ஊறிக்கொண்டேயிருக்கிறது.

நீளத் தும்பிக்கை, பெரிய காது, சிறிய கண்கள் என்றெல்லாமும் கிடையாது. கிணற்றில் எப்படித் தானாக, சுயம்புவாகத் தோன்றினாரோ, அதேபோல, எந்த மாறுதலும் இல்லாமல் இயற்கையாகவே இருக்கிறார் பிள்ளையார். ஆனால் அவரது சக்தி உலகம் முழுவதும் பரவி நிற்கிறது!

பக்தர்கள் இவரை பயபக்தியுடன் வணங்கு

கிறார்கள். காரணம், காணிப்பாக்கம் விநாயகர், `நல்லவருக்கு நல்லவர், கெட்டவருக்குக் கெட்ட வர்' என்று தெலுங்குப் படம் போல் பஞ்ச் டயலாக் கெல்லாம் சொல்கிறார்கள்.


## 90 நாட்களில் தண்டனை

யாராவது, ஏதாவது விஷயத்தில் பொய் சொன் னால், அவரைத் தரதரவென இங்கே இழுத்து வந்து விடுகிறார்கள். விநாயகர் முன் சத்தியம் செய்யச் சொல்கிறார்கள்.

`காணிப்பாக்கம் வரசித்தி விநாயகர் சாட்சி யாக நான் சொல்வதெல்லாம் உண்மை. உண்மை யைத் தவிர வேறெதுவும் இல்லை' என்று கூறி னால், அதனை சத்தியப் பிரமாணமாக இன்றும் ஆந்திர கிராமப் பஞ்சாயத்துகளில் ஏற்றுக் கொள்கிறார்கள்.

காரணம், இந்த விநாயகர் முன் யாராவது பொய் சொன்னால் 90 நாட்களுக்குள்ளேயே பொய் சொன்னவர் கடுமையாக தண்டிக்கப்படுவார் என்பதால்தான்!

உண்மை மட்டுமல்ல, ஊனமுற்றவர்களையும் இந்த விநாயகருக்கு மிகவும் பிடிக்கும். அவர் களின் குறைகளையெல்லாம் தீர்த்து வைப்பதில் இவருக்கு தீராத இஷ்டம்.




காரணம், இந்த விநா யகர் முதலில் காட்சி தந்ததே ஊனமுற்ற மூன்று சகோதரர் களுக்குத்தான். ஊர்ப் பெயர் தோன்றி யதும் அதனால்தான்! இதோ, அந்தக் கதை:

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்த ஊரின் பெயர், விஹார புரி.

இங்கே ஏழை விவசாயிகளான மூன்று சகோ தரர்கள் இருந்தனர். அவர்களிடம் `காணி' நிலமே இருந்தது. அது மட்டுமல்ல, மூவருமே ஊனமுற்றவர்கள்.

ஒருவருக்கு வாய் பேச இயலாது. அடுத்த வருக்குக் காது கேட்காது. மூன்றாமவருக்குக் கண் தெரியாது!

தங்கள் ஊனத்தைப் பொருட்படுத்தாமல், மூவ ரும் ஒற்றுமையுடன் விவசாயம் செய்து பிழைத்து வந்தார்கள்.

கோடைக் காலத்தில் அவர்கள் நிலத்தில் இருந்த கிணற்றில் நீர் வற்றியதால், அதனை ஆழப்படுத்த முனைந்தார்கள்.

மண்வெட்டியுடன் கிணற்றில் இறங்கினான், வாய் பேச முடியாதவன்.

பூமியைத் தோண்டும்போது ஒரு பாறை யின்மீது மண்வெட்டிபட்டு, `டங்'கென்று ஓசை எழுந்தது. அது மட்டுமல்ல, வெட்டுப்பட்ட இடத்திலிருந்து குபுகுபுவென ரத்தம் பீரிட்டது.

அதைக் கண்டதும், இதுவரை வாய் பேசாதிருந்தவன், `ஐயோ ரத்தம்' என்று அலறினான்! அவன் அலறியது, மேலே நின்றிருந்த, காது கேட்காத வனுக்குக் கேட்டது!

எட்டிப் பார்த்த கண் தெரி யாதவன், `என்ன ஒரே சிவப் பாக இருக்கிறதே' என்று வியந்து பார்த்தான்!

அப்புறம் என்ன? மூவரின் குறைகளும் திடீரென தீர்ந்த தைக் கண்ட கிராம மக்கள் அதிசயித்தனர்.

கிணற்றுக்குள் இறங் கிப் பார்த்தனர். பாறை உருவில் அங்கே வரசித்தி விநாயகர் காட்சியளிப்பது கண்டு

பரவசப்பட்டனர். பயபக்தி யுடன் வணங்கினர். (இன் றைக்கும் மண்வெட்டித் தழும்பு விநாயகர் சிரசில் இருக்கிறது.)

காணி நிலத்தில் தோன்றியதால், காணிப் பாக்கம் விநாயகர் என்ற பெயர் ஏற்பட்டது. பக்தர்கள், தேங்காய் உடைத்தபோது பரவிய இளநீர், ஒரு காணிப் பரப்பளவு பரவியதால் `காணிப்பாக்கம்' என்ற பெயர் ஏற்பட்டதாகவும் கூறுகிறார்கள். (பாரகம் என்றால் நீர் பரவுதல் என்று தெலுங்கில் அர்த்தம். பாரகம் என்பதே பாக்கம் என்றானது!)

மிகவும் சிறியதாக இருந்த கோயிலை 11ம் நூற்றாண்டில் குலோத்துங்க சோழன், பெரிதாகக் கட்டித் திருப்பணி செய்தான். 1336ல் விஜயநகர மன்னர்களும் இங்கே சிறப்பு வழிபாடு செய்ததாக வரலாறு கூறுகிறது.

பாகுதா கோயிலின் அருகில் பாகுதா நதி காணப்படுகிறது. அந்தக் காலத்தில், அரசனுக்குச் சொந்தமான மாந்தோட்டம் ஒன்று இங்கே இருந்தது. அதிலிருந்த கனிகளை விகிதா என்ற ஒருவன் பறித்துச் சாப்பிட்டான்.

வெகுண்ட அரசன், விகிதாவின் இரு கை களையும் வெட்டிவிட்டான்.

அறியாமல் செய்த பிழைக்கு, இவ்வளவு பெரிய தண்டனையா? என்று துடித்த விகிதா, அந்த நதியில் நீராடி, காணிப்பாக்கம் விநாயகரை நோக்கி "பாகு தா (கை தா)" என்று வேண்டினான்.

அவனுக்குக் கையும் கிடைத்தது, நதிக்கு `பாகுதா' என்ற பெயரும் ஏற்பட்டது.

அலங்காரமில்லாத வெண்மை நிற ராஜ கோபுரத்தை அடுத்து உள்ளே சென்றால்,அலங் காரமில்லாமல், சுயம்புவாகக் காட்சி தரும் காணிப்பாக்கம் வரசித்தி விநாயகரைக் காண லாம்.

அவரைச் சுற்றி ஈரம் கசிந்து கொண்டிருப்பதை எட்டிப் பார்க்கலாம். அது தண்ணீர் மட்டுமல்ல, அவரது அளவிட முடியாத கருணையும்தான் என்று புரிந்ததால், நம் கண்களில் இருந்தும் கண்ணீர் கசிகிறது.

அருகில் வேறு இரண்டு கோயில்களும் உள்ளன. ஒன்று, மணிகண்டேஸ்வரர் ஆலயம். இங்கிருந்து ஒரு பாம்பு, தினமும் காணிப்பாக்கம் விநாயகரை வணங்கிச் செல்வதாக ஒரு நம் பிக்கை. மற்றது வரதராஜ சுவாமி ஆலயம்.

ஜனமே ஜய அரசன் கனவில் வந்து, பெருமாளே கட்டச் சொன்ன கோயில் இது.

இன்றும் விநாயகரைசுற்றி ஈரம் கசிந்து கொண்டிருப்பதை சற்று கவனித்து பார்த்தால் தெரியும். இன்னும் நம்மை அதிசயக்க வைக்கும் நிகழ்வாக காணிப்பாக்கம் விநாயகர் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வருகிறாராம்.

கொல்லபல்லி கிராமத்தை சேர்ந்த பெஜவாடா சித்தைய்யா என்பவர் ஒரு வெள்ளி கவசம் சுவாமிக்கு வழங்கினார். ஆனால் தொடர்ந்து விநாயகர் சிலை வளர்ந்து கொண்டு வருவதால் வெள்ளி கவசம் விநாயகர் பொருந்த வில்லையாம்.





# ஸ்ரீ சௌந்தர்யலஹரி தோன்றிய வரலாறும் கிடைக்கு பலனும்

காசியில் தரிசனம் முடித்துவிட்டு பத்திநாத் வந்த ஆதிசங்கரர் கயிலை மலை செல்வதற்கு விரும்பினார், ஆனால் கயிலை செல்வதற்கு வழி தெரியவில்லை, அந்த நேரத்தில் அங்கு தென்பட்ட சண்டிகேஸ்வரரின் காலடி தென்பட்டது.

அக்காலடியை துணை கொண்டு கயிலை மலை அடைந்தார்.

சங்கரர் வந்த வேலையில் நந்தி பகவான் பணி நிமித்தமாக வெளியே சென்று இருந்தார். சங்கரர் கயிலை வந்தது நந்தி பகவானுக்கு தெரியவில்லை.

கயிலையில் ஸ்ரீ சிவபெருமானையும் தாயார் பார்வதியையும் கண்ட சங்கரர் மிகுந்த ஆனந்தம் அடைந்தார்.

சங்கரரிடம் சிவபெருமான் ஐந்து லிங்கங்களை கொடுத்தார். மேலும் சிவபெருமானே எழுதிய ஓர் ஓலை சுவடிகளை கொடுத்தார்.

பஞ்ச லிங்கங்களை பிரதிஷ்டை செய்து, நான் எழுதிய இந்த பாடல்களை உலகிற்கு கொண்டு செல்க என ஆசிர்வாதம் வழங்கினார் ஈசன்.

இந்த ஓலைச் சுவடியில் 13 பாடல்களை உமாமகேஸ்வர தோத்திரமாக பாடினார் சங்கரர்.

சிவதம்பதியரின் தரிசனத்தை முடித்து கயிலையை விட்டு இறங்கினார் சங்கரர், அந்த சமயத்தில் எதிரே வந்த நந்தி, சங்கரரின் கையில் இருந்த ஓலைச் சுவடிகளைப் பார்த்து, "இதென்ன ஓலைச்சுவடி" என்று கூறி ஆதிகயிலையில் இருந்த எடுத்துச் செல்கிறாயா? என்று கேட்டு சங்கரரை வழிமறித்தார்.

சிவ சக்தி தரிசனத்தை கண்ட சங்கரர் மெய் மறந்த நிலையில் இருந்ததால், நந்தி பகவானின் கேள்வி காதில் விழவில்லை, ஆனந்த மயக்கத்தில் இருந்ததால் பேசவில்லை.

சங்கரரின் கையில் இருந்த ஓலைசுவடியை நந்தி பிடிங்கி கொண்டு அதனை படிக்க ஆரம்பித்தார்.

100 பாடல்கள் இருந்த தொகுப்பில் 59 நந்தி கைக்கு போனது.

தன் கையில் பிடுங்கப்பட்ட பாடல்களை படிக்க ஆரம்பித்த நந்திபகவான், அந்த பாடலின் அர்த்தத்தை கண்டு லயித்து கண் மூடி நின்றிருந்தார்.



சுய நினைவுக்கு வந்த ஆதிசங்கரர் தன்னிடமிருந்த 41 ஓலைகளுடன் நந்தி பகவானிடமிருந்து விலகி வந்துவிட்டார்.

மீதி ஓலைகளையும் நந்தி பகவான் பிடுங்கிவிடுவார் என்று நினைத்து ஆதி சங்கரர் கையில் மீதமிருந்த ஓலை சுவடிகளோடு வெளியேறினார்.

கயிலை மலையின் முடிவில் நின்று கயிலை மலையை பார்த்தார். நாம் அவசரப்பட்டு கீழே வந்து விட்டோமோ!

இந்த சுவடிகளை இறைவனே தந்தார் என சொல்லி அவரிடம் வாங்கி வந்து இருக்கலாமே! என்று நினைத்தவாரு மீண்டும் கயிலை சென்று நந்திபகவானிடமிருந்து அந்த ஓலைச் சுவடிகளை வாங்கி வந்துவிடலாம் என்ற முடிவிற்கு வந்தார்.

சிவனே அம்பிகையின் பக்தனாக அல்லவா அந்த பாடலை எழுதி இருந்தார்.

அந்த ஓலைச் சுவடிகளை நந்தியிடம் பறி கொடுத்து பெரிய பாவம் செய்தேனே! ஏன் இப்படி ஆனது!

மறுபடி மேலே போய் வாங்கி வருவோமா!

மீண்டும் கயிலை நோக்கி செல்லும் நேரத்தில்

ஆதி சங்கரர் முன் பார்வதி தாயார் தோன்றி, மீதமுள்ள பாடல்களை நீயே பாடு சங்கரா அதுவே பரமனின் லீலை என்றார்.

தயாரின் வாக்குப்படி ஈசனின் கட்டளையாக ஏற்று நந்தி பகவான் பறித்த, ஈசன் எழுதிய 59 பாடல்களுக்கு பதில், ஆதி சங்கரரே பாடல்களை எழுதினார்.

இவ்வாறு சிவபெருமானும், ஆதி சங்கரரும் இணைந்து எழுதிய பாடல்கள்தான் ஸ்ரீ சௌந்தர்யலஹரி...

**சிவபெருமான் 41 பாடல்களும், ஆதி சங்கரர் 59 பாடல்களும்,**

அம்மனை புகழ்ந்து பாடிய பாடல்களே மிகவும் சக்தி வாய்ந்த அம்மனுக்குகந்த பாடலாக திகழ்கிறது ஸ்ரீ சௌந்தர்யலஹரி....

ஜனனி ஜனனி ஜகம் நீ அகம் நீ
ஜகத்காரணி நீ பரிபூரணி நீ
ஒரு மான் மழுவும் சிறு கூன் பிறையும்
சடை வார் குழலும் விடை வாகனமும்
கொண்ட நாயகனின் குளிர் தேகத்திலே
நின்ற நாயகியே இட பாகத்திலே.......

மனிதர்கள் செய்யும் நன்மை தீமைக்கு ஏற்ப பலன் கிடைக்கும் என்பது நியதி, நன்மை செய்யும்போது அதற்கான பலன் தொடர்ந்து நமக்கு கிடைத்து கொண்டே இருக்கும்.

அந்த வகையில், நாம் செய்யும் நன்மையுடன் சேர்ந்து சௌந்தர்யலஹரியையும் படித்து வந்தால், செய்யும் நன்மைக்கான பலன் பல மடங்கு பெருகும் என்பதால், நல்ல விஷயங்களை செய்யும்போது அவசியம் ஸ்ரீ சௌந்தர்யலஹரியின் துணையை நாடினால் பலன் மிகும்.

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்







பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள

 **கீதா சமையல்**

(geetha samayal)

youtube சேனலை பாருங்கள்




geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்

# கிருஷ்ணார்ப்பணத்தின் மகிமையும் பெருமையும்




ஒரு சிறிய கிராமம் மத்தியில் அழகான ஒரு கிருஷ்ணர் கோவில் அர்ச்சகரும், அவரிடம் வேலைபார்த்துவரும் சிறுவன் துளசிராமனும் காலை 4 மணிக்கே கோவிலுக்கு வந்து விடு வார்கள்.

துளசிராமனுக்கு கோவில் தோட்டத்து பூக்களையெல்லாம் பறித்து மாலையாகத் தொடுத்து தரவேண்டிய பணி.

கிருஷ்ண பகவானே கதி என்று கிடக்கும் துளசிராமனுக்கு, அந்தப் பூப்பறிக்கும்நேரமும் கிருஷ்ணனின் நினைப்புதான்! ''கிருஷ்ணார்ப் பணம்'' என்று மனதுள் சொல்லியபடியே பூக்




களைப் பறித்து, தொடுப்பான்.

பத்து, பதினைந்துமாலைகள் கட்டி முடித்தவுடன், ஏதோ அவனே கிருஷ்ணருக்குசூட்டிவிடுவது போன்று மனதிற்குள் நினைத்துக்கொண்டு, அர்ச்சகரிடம் கொடுத்து விடுவான்.

கிருஷ்ணரின்சிலைக்கு மாலை சூட்ட போனால். ஏற்கனவேஒருபுதுமாலையுடன் கிருஷ்ணர் சிலை பொலிவு பெற்று இருக்கும். அதைப் பார்த்த அர்ச்சகருக்கு, இது துளசிராமனின் குறும்பாக இருக்குமோ என்று சந்தேகம்.

அவனைக் கூப்பிட்டு, "துளசிராமா!!! இதெல்லாம் அதிகப்ரசங்கித்தனம்; நீ மாலை கட்டவேண்டுமேதவிர, சூட்டக்கூடாது!" என்று கண்டித்தார்.

"ஸ்வாமி!நான்சூட்டவில்லை; கட்டிய மாலைகள் மொத்தம் 15. அத்தனையும் உங்களிடம் கொடுத்து விட்டேன்!" என்ற அவன் சொற்கள் அவர் காதில் விழவேயில்லை." நாளையிலிருந்து அண்டாக்களில் தண்ணீர் நிரப்பும் பணியைச் செய்! பூ கட்டவேண்டாம்!" கட்டளையாக வந்தது.

இதுவும் இறைவன் செயல் என்று, துளசிராமன் நீரிறைக்கும் போதும், தொட்டிகளில் ஊற்றும் போதும்," "கிருஷ்ணார்ப்பணம்" என்று மனம் நிறைய சொல்லிக்கொள்வான். மனமும்நிறைந்தது!

இப்போதெல்லாம் சிலைக்கு அபிஷேகம் செய்ய அர்ச்சகர் வரும்முன்பே , அபிஷேகம் நடந்து முடிந்து, கருவறை ஈரமாகி இருக்கும். நனைந்து. நீர் சொட்டச் சொட்ட கிருஷ்ணர் சிலை சிரிக்கும்.

அர்ச்சகருக்கு கடும் கோபம், "துளசிராமா!! நீ அபிஷேகம் செய்யுமளவுக்கு துணிந்து விட்டாயா! உன்னோடு பெரிய தொல்லையாகிவிட்டதே ! " வைய்ய ஆரம்பிக்க.

துளசிராமன் கண்களில் கண்ணீர். "ஸ்வாமி! நான் அண்டாக்களை மட்டும்தான் நிரப்பினேன்; உண்மையிலேயே கிருஷ்ணனுக்கு எப்படி அபிஷேகம் ஆனது என்று எனக்கு தெரியாது! என்றான்.

அவ்வளவுதான் அர்ச்சகர் மறுநாளே மடப்பள்ளிக்கு மாற்றிவிட்டார். பிரஸாதம் தயாரிப்பு பணிகளில் ஒரு சிற்றாளன் ஆனான். இங்கும்ஞ். காய் நறுக்கும்போதும் அவன், "கிருஷ்ணார்ப்பணம் " என்றே தன்னுடைய செய்கைகளை கடவுளுக்கே காணிக்கையாக்கினான்.

அன்று அர்ச்சகர் முன்னெச்சரிக்கையாக சன்னிதானத்தை பூட்டிச் சாவியை எடுத்துச் சென்றுவிட்டார்.

மறுநாள், அதிகாலையில் சந்நிதிக் கதவைத் திறக்கும்போதே கண்ணன் வாயில் சர்க்கரைப் பொங்கல் நைவேத்யம்!!

"மடப்பள்ளியில் அப்போதுதான் தயாராகி, நெய்விட்டு இறக்கி வைக்கப்பட்டிருந்தது! அதற்குள் எப்படி இங்கு வந்தது? நானும் கதவைப் பூட்டிதானே சென்றேன்! பூனை, எலி கொண்டு வந்திருக்குமோ?

துளசிராமனுக்கு எந்த வேலை தந்தாலும் அந்தப்பொருள் எப்படியோ எனக்கு முன்பே இங்கு வந்துவிடுகிறதே ! அவன் என்ன மந்திரவாதியா?" என்று குழம்பினார் அர்ச்சகர்.




இன்று எதுவும் கண்ணடிக்கவில்லை, ” துளசிராமா! நாளை முதல், நீ வாசலில், பக்தர்களின் செருப்பை பாதுக்காக்கும் வேலையைச் செய்! நீ அதற்குத்தான் சரியானவன்! என்று கூறினார்.

"பூ, நீர், பிரஸாதம் – எல்லாம் நல்ல பொருட்கள்; சந்நிதிக்கு வந்துவிட்டன; இனி என்ன ஆகிறதென்று பார்ப்போம்;” இதுதான், அர்ச்சகரின் எண்ணம்.

இதையும் கடவுள் விருப்பம் என்று ஏற்றுக் கொண்ட துளசிராமன். அன்றுமுதல் வாசலில் நின்றிருந்தான்.

அதே, "கிருஷ்ணார்ப்பணம்" என்றே அந்த வேலையையும் செய்துகொண்டு இருந்தான். இன்றும் அர்ச்சகர் பூட்டி, சாவி கொண்டு சென்றார்.

மறுநாள் காலை; சந்நிதிக்கதவு திறந்ததும், அர்ச்சகர் கண்ட காட்சி உடலெல்லாம் அவருக்கு நடுங்கத்தொடங்கியது.

இதென்ன கிருஷ்ணா! உன் பாதங்களில் ஒரு ஜோடி செருப்பு!!! பாதகமலங்களின் பாதுகையின் பீடத்தில் சாதாரண தோல் செருப்பு! எப்படி வந்தது?

துளசிராமன் எப்படிப்பட்டவனானாலும், சந்நிதிப் பூட்டைத் திறந்து இப்படி செருப்பை வைக்க யாருக்குத்தான் மனம் வரும்?

ஆச்சரியம், அச்சம், அர்ச்சகருக்கு வேர்த்துக் கொட்டியது.

அப்போது. எங்கிருந்தோ ஒரு குரல்,

"அர்ச்சகரே! பயப்பட வேண்டாம் அந்த துளசிராமனுக்கு நீ எந்த வேலை தந்தாலும், அவன், "கிருஷ்ணார்ப்பணம்" என்று எனக்குக் காணிக்கையாக்கி விடுகிறான்! அப்படி அன்போடு அவன் தரும் காணிக்கையை நான் மனமுவந்து ஏற்றுக்கொண்டேன்.


நினைவெல்லாம் எங்கோ இருக்க செய்யும் பூஜையை விட, எதை செய்தாலும் எனக்குக் காணிக்கையாக்குபவனின் அன்பை நான் ஏற்றுக்கொண்டேன்.

துளசிராமன் ஒரு யோகி! அவன் அன்பு எனக்குப் பிரியமானது !என்றார் பகவான்.

கிருஷ்ண பகவானின் இந்தக் குரல் கேட்டு வாசல் பக்கம் ஓடிவந்து அந்த யோகி துளசிராமனின் கால்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினார், அர்ச்சகர்!

ஆம் நாம் எந்த வேலை செய்தாலும் அதை நம் கிருஷ்ணருக்கு அர்ப்பணம் செய்தால் அதை அவர் மனமார ஏற்றுக் கொள்வார்.

Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.
Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.
Website: www.aanmeegamalar.com / E-mail: aanmeegamalar@gmail.com


ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்
FREE
170 e-books
1000–க்கணக்கான
ஆன்மிக செய்திகள்
eBook
முற்றிலும் இலவசம்
எந்தவித மறைமுக
கட்டணமும் இல்லை
பாருங்கள்... டவுன்லோடு
செய்து படியுங்கள்...
aanmeegamalar.com
தொடர்பு எண்: 9444228203 mail:aanmeegamalar@gmail.com